ISSN 1703-9185

# ஆத்மஜோதி

## Arthmajothy

**Jnuary - March 2016**

மன்மத வருட
தை - பங்குனி 2016
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



மாதாஜி புலவர் சி. விசாலாட்சி அம்மையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க



**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***



**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

---

## வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ

**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**





NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.





HONEST AND FRIENDLY SERVICE
**CALL: MR. P. SINGARAJ**
**416-993-8443**
**905-471-3058**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உ

சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம்: 1948

ARTHMA JOTHY

Est. 1948

ISSN 1703-9185



கனடா மலர் 16:

இதழ் 4

மன்மத வருடம்

தை - பங்குனி

திரு. ஆண்டு -2046

ஆங்கில ஆண்டு 2016



கௌரவ ஆசிரியர்

டாக்டர் இ. இலம்போதரன்

பிரதம ஆசிரியர்

திரு. வி. கந்தவனம்

உதவி ஆசிரியர்கள்

திரு. செ. சோமசுந்தரம்

திரு. சிவ. முத்துலிங்கம்



எழுத்தமைப்பு

திரு. மா. கனகசபாபதி

அச்சுப் பதிப்பு

விவேகா அச்சகம்

வெளியீடு

ஆத்மஜோதி

தியான நிலையம்

பதிவு இல: 1476651



தொடர்பு முகவரி

Siva Muthulingam

ARTHMAJOTHY ILLAM

1473 Birchmount Rd.

Toronto, ON. M1P 2G4

Tel: (416) 724-6240


## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| எங்குமுள்ள பிள்ளையார் | 4 |
| திருவைந்தெழுத்து விளக்கம் | 5 |
| திருவாசகத்தில் பிடித்த பத்து | 14 |
| சும்மா இரு | 19 |
| ஆத்மீகக் கணக்கு பாகம் 0 | 23 |
| ஆத்மீகக் கணக்கு பாகம் 1 | 25 |
| மூவர் தமிழும் பக்தி நெறியும் | 27 |
| சைவத் தமிழ் சான்றோன் | 32 |
| பகவான் ஸ்ரீ ரமண மகரிசி - பாகம் 8 | 34 |
| அரோகரா கோசம் | 38 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 43 |
| குப்பிழான் கிராமத்தின் ஞானப் புதல்வி | 45 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப் பேரவையின் மனிதாபிமானம்

மனிதாபிமானம் என்பது சொல்லி வருவதில்லை. எம்மவர்கள் பொதுவாகச் சொந்தபந்தம் மற்றும் இனப்பற்று, தேசப்பற்றுப் போன்ற பற்றுக்கோடுகளின் அடிப்படையில் தானதருமங்களைச் செய்துவருவது வழக்கம். இந்த வழக்கத்துக்கு மாறாக ஒன்ராறியோ இந்துசமயப் பேரவை உறுப்பினர்கள் 2015ஆம் ஆண்டு திசம்பர் மாதம் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வெள்ளத்தாற் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதிதிரட்டி உதவியிருப்பது அவர்களுக்கு இருக்கக்கூடிய இயல்பான மனிதாபிமானத்தை வெளிக்காட்டுகின்றது.

நிதியைத் தமிழ்நாட்டில் வெள்ள நிவாரணப்பணியில் ஈடுபட்டுத் தொண்டாற்றிக் கொண்டிருந்தவரும் எமது அமைப்புடன் நெருங்கிய தொடர்புகொண்டிருப்பவருமாகிய சிவத்திரு சைவ சித்தாந்த ரத்தினம் இ. செல்லையா அவர்களுக்கு அனுப்பி, அவர்மூலம் பாதிக்கப்பட்ட ஐவருக்கு உதவியிருக்கின்றோம். பேரவை அவருக்கு இந்திய ரூபாய் 25,000 அனுப்பியிருந்தது. மிகவும் பாதிக்கப்பட்ட ஐவருக்குத் திரு. செல்லையா அவர்கள் ஆளுக்கு ஐயாயிரம் கொடுத்துதவிப் பற்றுச்சீட்டுக்களையும் வாங்கி அனுப்பியிருக்கின்றார். அவர்களது பெயர்கள் பின்வருமாறு:

1. ச. விஜயலட்சுமி, சென்னை - 92
2. ஆர். மீனாள்வர்த்தனி, சென்னை - 116
3. ரா. ஆதிலட்சுமி, சென்னை - 116
4. இரா. சாந்தி, சென்னை - 92
5. ச. தனலட்சுமி, சென்னை - 116

இவர்களிடமிருந்து பெற்ற பற்றுச்சீட்டுகளும் பிறகணக்கு வழக்குகளும் 27.02.2016 சனிக்கிழமை பேரவையின் தலைமையகமாகிய ஆத்மஜோதி இல்லத்தில் நடந்த அப்பர்பெருமானின் திருத்தாண்டகம் முற்றோதலின் பொழுது செயலாளர் திருமுறைச்செல்வர் திரு. சிவ முத்துலிங்கம் அவர்களால் உறுப்பினருக்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

நிதி சேகரிப்பில் ஈடுபட்ட பேரவைத் தொண்டர்களுக்கும் நிதிவழங்கிய தருமசீலர்களுக்கும் முக்கியமாக அமெரிக்க மருத்துவர் திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்மலம் நகுலேந்திரன் அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அறத்தால் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. - திருக்குறள் 39

வி. கந்தவனம்
ஆசிரியர்


உ

துர்க்காதேவி துணை

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

### தெல்லிப்பழை

# தெற்கு வாயில் கோபுரத் திருப்பணி

அம்பாள் அடியார்களே!

வணக்கம்!

துர்க்காதேவியின் திருவருளால் எழுந்தருளி அம்மன் வாசலாகிய தெற்கு வாயிலில் 61 அடி உயரமான அழகிய கோபுரம் கட்டும் திருப்பணி தைப்பூச நன்நாளில் அடிக்கல் நாட்டப்பெற்று, தொடர்ந்து வேலைகள் நடைபெற்று வருகிறது. இத்திருப்பணிக்கு தங்களால் இயன்ற காணிக்கையை அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'

**வங்கி விபரம்: இலங்கை வங்கி, சுன்னாகம்**
**கணக்கு இல. 77683985**

**துர்க்காதேவியின் திருவருளால் தாங்கள் அனைவரும் நிறைவாக வாழ வேண்டுகிறோம்**

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் நிர்வாக சபை**
**தெல்லிப்பழை**

செஞ்சொற்செல்வர்
கலாநிதி ஆறு. திருமுருகன்
தலைவர்

திரு. நா. தவநாதன்
நிர்வாகச் செயலாளர்

திரு. சி. சண்முகானந்தன்
இணைச் செயலாளர்

திரு. அ. சண்முகநாதன்
தனாதிகாரி

வைத்திய நிபுணர் தி. திவாகரன்
பொதுச் செயலாளர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# எங்குமுள்ள பிள்ளையார்

முன் இதழ் தொடர்ச்சி -

### செங்காட்டங்குடி வாதாபி கணபதி

செல்லாத வழியெல்லாம் செல்ல வைப்பார்
தீராத வினையெல்லாம் தீர வைப்பார்
வெல்லாத போரெல்லாம் வெல்ல வைப்பார்
விளங்காத பொருளெல்லாம் விளங்க வைப்பார்
பொல்லாரை நல்லாராய்ப் புதுக்கி நிற்பார்
புகழ்சான்ற செங்காட்டங் குடியைப் போற்றி
வல்லாளர் சிறுத்தொண்டர் வணங்க நின்ற
வாதாபி கணபதியை வணங்கு வாமே. (152)

### திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர்

வெள்ளைநீ றணிந்துள்ள மேனி யாரை
வேதத்து மந்திரமாய் விளங்கு வாரை
வெள்ளைமா தந்தத்து வேழத் தாரை
விரிசடையார் பெற்றமுதற் பிள்ளை யாரை
நள்ளிருளாய்க் கள்ளஞ்செய் யாண வத்தை
ஞானத்தால் அடக்கிவலஞ் சுழியில் நண்ணும்
வெள்ளையரை வித்தகரை வினைகள் தீர்க்கும்
விநாயகரை வலம்வருவார் வெல்வார் வீடே. (153)

### திருச்சி மலைக்கோட்டை மாணிக்க விநாயகர்

நாணக்கார் கூந்தலிள வள்ளி தன்னை
நாதத்தால் மருட்டிநல நம்பிக் கீந்தார்
பேணிக்கை யேந்திவிழி நீர்பெ ருக்கி
பிழையாவும் பொறுத்தருளப் பிதற்றி வேண்டி
மாணிக்கும் மலைக்கோட்டை ஏறு வார்க்கு
வாரியருள் வழங்கிவழி அனுப்பும் வள்ளல்
மாணிக்க விநாயகரைத் திருச்சி சென்று
வணங்குவார்க் கேதுகுறை வாழ்வி லாமே. (154)

வி. கந்தவனம்

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவைந்தெழுத்து விளக்கம்

சைவசித்தாந்த கலாநிதி
க. கணேசலிங்கம்,
இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்.

மந்திரங்களில் மேலான மந்திரமாகப் பஞ்சாட்சரம் சைவத்தில் கொள்ளப்படுகின்றது. ஐந்து எழுத்துக்கள் (பஞ்ச அட்சரம்) கொண்டது பஞ்சாட்சர மந்திரம் ஆகும். தமிழில் இது மந்திரம் எனப்படுகிறது.

நமசிவய என்பது தூல பஞ்சாட்சரம். சிவயநம என்பது சூக்கும பஞ்சாட்சரம், அதிசூக்கும பஞ்சாட்சரம், காரண பஞ்சாட்சரம், மகாகாரண பஞ்சாட்சரம், ஆகிய மிக மந்திரங்களும் உள்ளன. இவை அனைத்தையும் இக்கட்டுரையில் விளக்குவது இயலாது. தூல சூக்கும பஞ்சாட்சரங்கள் குறித்தே இக்கட்டுரை அமைந்துள்ளது.

## நாதன் நாமம்

மந்திரம் என்ற சொல் மந், த்ர என்ற இரு சொற்களால் ஆனது. இதன் பொருள் நினைப்பவரை (மந் - நினை; த்ர - காப்பாற்று) எது காப்பாற்றுகிறதோ அது மந்திரம் ஆகும்.

திருநீறு பூசும் பொழுது சிவ சிவ என்று ஓதிப் பூச வேண்டும். அப்பொழுது பூசுபவனுக்கு மந்திரமாக அமைகிறது. மந்திரமாவது நீறு என்னும் தேவாரத் தொடர் இதனை விளக்குகின்றது.

நமச்சிவாய என்ற சொல்லின் பொருள் சிவனுக்கு வணக்கம் என்பதாகும். அது இறைவனின் பெயராகவும் உள்ளது. ஞானசம்பந்தப் பெருமானின் நாதன் நாமம் நமச்சிவாயவே, என்பதும் நக்கன் நாமம், நந்தி நாமம் போன்ற தொடர்களும் நமச்சிவாய என்ற பொருளை உணர்த்துகின்றன.

இறை நாமமாகிய நமச்சிவாயத்தை உள்ளன்போடு ஓதும் பொழுது அது மந்திரமாகும். மெய்ப்பொருளாக உள்ளது நமச்சிவாய என்ற பதம், இதனை மனமொன்றி அன்போடு ஓதும் போது

சுயநலம் படைத்தவன் பிறர் செய்த தீமையை மறவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலாகவும் நன்னெறி காட்டுவதாகவும் அமைகிறது. பின்வரும் சம்பந்தர் பாடல் இதனை விளக்குகிறது.

காத லாகிக் கசிந்துகண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவதும்
நாதன் நாமம் நமச்சி வாயவே

மாணிக்கவாசக சுவாமிகள் தனது சிவபுராணத்தில் இதனைப் போற்றி நமசிவாய வாழ்க என்று தொடங்குகிறார். திருவைந்தெழுத்தை ஓடமாகக் கொண்டிருக்கும் தன்னை இறைவன் ஆட்கொண்டதாகக் கூறுகிறார். ஐந்தெழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை.... தொடர் இதனை உணர்த்துவதாக உள்ளது. நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா
நமச்சிவாயவே என்று சுந்தரர் பாடுகிறார்.

அப்பரடிகளைக் கல்லில் கட்டிக் கடலில் விட்டபோது, அவரைக் கரை சேர்த்ததை கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமசிவாயவே என்று பாடிக் குறிப்பிடுகிறார். இதனைத் தான் படைக்கலமாகக் கொண்டுள்ளதாகவும் கூறுகின்றார். ------- நாமத்தெழுத்து அஞ்சும் நாவிற் கொண்டேன் என்பது அவரின் தேவாரத் தொடர்.

நமசிவாய என்றோ சிவாயநம என்றோ ஓதுவதற்கும் அதற்கேற்ற ஒரு பக்குவம் எல்லோருக்கும் இருப்பதில்லை. சிவாயநம என்று சொல்வதற்குத் தான் என்ன தவம் செய்திருக்க வேண்டும் என்று கூறி மணிவாசகர் உருகுகிறார். நானேயோ தவம் செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன் என்பது அவரின் கூற்று. இறை நாமமாகவும் மந்திரமாகவும் அமைந்த திருவைந்தெழுத்தின் பெருமையையும் பிற அருளாளரும் பலப்பட விளக்கியுள்ளனர்.

**அஞ்செழுத்தே அனைத்தும்**

உயிருக்கு இயல்பாகவே ஒரு குறையுண்டு. ஆணவம் என்னும் மலம் அதனுடன் சேர்ந்திருந்து, அதன் அறிவு, இச்சை, செயல்

*அறிவுள்ளவன் பிறர் செய்த தீமையை மறப்பதில்லை*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய ஆற்றல்கள் வெளிப்படவிடாது தடுக்கிறது. செம்பிற் சுயம்பு போல் உயிருடன் இயல்பாக (சகசமாக) இருப்பதால், ஆணவம் சகசமலம் எனப்படுகிறது. உயிருக்குக் கட்டாக இருப்பதால் பாசம் (கட்டு) எனவும் சொல்லப்படுகிறது. இதன் சேர்க்கையால் கட்டுப்பட்டு இருப்பதால், உயிர் பசு எனப்படுகிறது. பசுவாகிய உயிர் தனக்குப் பதியாக (தலைவனாக) இருக்கும் இறைவனை அறிவதில்லை.

ஆணவமலக் கட்டு நீக்கி உயிர் உய்தி பெறுவதற்காகக் கருணாமூர்த்தியாகிய சிவபெருமான் மாயை என்னும் நுண்பொருளிலிருந்து உயிருக்கு வேண்டிய உடலைப் படைத்தளித்துப் பிறவியைக் கொடுக்கிறான். பிறவி எடுத்த உயிர் வினைபுரிந்து, அனுபவம் பெற்று, அறிவு வளர்ச்சி அடைகிறது. அறிவு வளர வளர உயிருக்கு அறியாமை செய்யும் ஆணவத்தின் பிடி சிறிது சிறிதாக நீங்குகிறது. ஆன்ம வளர்ச்சி ஏற்படுகிறது. உயிர் செய்யும் வினையையும் இறைவனே கொடுக்கிறான்.

உயிரின் வளர்ச்சியில் இறையருளே அதனுடன் ஒன்றாகவும் உடனாகவும் இருந்து ஆணவத்தின் பிடி நீங்கத் துணைபுரிகிறது. உயிருக்குத் தெரியாமல் தன்னை மறைத்து நின்றே இந்த உபசாரத்தை இறையருள் செய்கிறது. உயிர் வளர்ச்சியடைந்து முத்தியடையும் வரை இது நடைபெறுகிறது. மறைப்புச் செய்யும் நிலையில் இறையருளாகிய சிவ சக்திக்கு திரோதான சக்தி என்று பெயர். (திரோதானம் - மறைப்பு). கன்மத்தையும் மாயையையும் தொடர்பு படுத்தித் திரோதான சக்தி செயற்படுகிறது. ஆணவ மலத்துடன் சேர்ந்து செயற்படும் நிலையில் இருப்பதால் திரோதான சக்தியும் மலமாகக் கருதப்பட்டு, திரோதான மலம் எனப்படுகிறது. மலபரிபாகம் அடைந்து உயிர் விடுதலை பெறும் பொழுது திரோதான சக்தி அருட்சக்தியாக மாறி உயிருக்கு அருள் புரிகிறது.

இறை, அருள், உயிர், (கன்மம் மாயையுடன் கூடிய) திரோதான மலம், ஆணவ மலம் ஆகியவற்றைக் குறிப்பன. முறையே, சி, வா, ய, ந, ம என்ற திருவைந்தெழுத்துக்கள் அனைத்தும் இவற்றுள் அடக்கமாக இருக்கின்றன. ஆகவே சிவயநம அல்லது நமசிவய என்ற அஞ்செழுத்து அனைத்துமாக உள்ளது.

---

பண்பில்லாதவன் நல்லதிலும் தீமையை காண்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரணவத்தின் விரிவு

ஓம் என்பது பிரணவ மந்திரம். இது அ, உ, ம் என்னும் மூன்றெழுத்துக்களால் ஆனது. அ என்பது இறைவனையும், உ என்பது உயிரையும் ம் என்பது மலத்தையும் குறிக்கின்றன.

சிவயநம என்னும் சூட்சும பஞ்சாட்சரத்தில் சி சிவனையும், வ அவனின் அருளையும் ய உயிரையும், ந திரோதானத்தையும், ம மலத்தையும் குறிக்கின்றன. பின்வரும் உண்மை விளக்கப் பாடல் இதனைத் தெளிவுபடுத்துகிறது.

**சிவன் அருள் ஆவி திரோதம் மலம்ஐந்தும்**
**அவன் எழுத்து அஞ்சின் அடைவாம்.**

தனது அருட் சக்தியிலிருந்து பிரிவில்லாதவன் இறைவன். சக்தி பின்னமிலான் எங்கள் பிரான் என்பது திருவருட் பயனில் வரும் தொடர். எனவே, பிரணவத்திலுள்ள அ என்ற எழுத்து சிவனையும் சக்தியையும் ஒரு சேரக் குறிப்பதாகவுள்ளது. இதனால் சி,வ என்ற பஞ்சாட்சரப் பதங்கள் அ வின் விரிவாக உள்ளன என்பது புலப்படும். பஞ்சாட்சரத்தின் ய வும் பிரணவத்தின் உ வும் உயிரைக் குறிப்பதாகவுள்ளன. பிரணவத்தின் ம என்ற எழுத்திலுள்ள ம மலத்தையும், அதன் மேலுள்ள புள்ளி திரோதானத்தையும் குறிப்பன என்பர். இதனால் பஞ்சாட்சரத்திலுள்ள ந, ம எனும் பதங்கள் பிரணவத்திலுள்ள ம் என்பதன் விரிவாகவுள்ளதை அறியலாம். ஆகவே, பிரணவ மந்திரத்தின் விரிவே பஞ்சாட்சரம் என்பது அறியக்கூடியதாக உள்ளது.

ஓம் என்ற மந்திரத்தில் ஐந்து கூறுகள் உள்ளன என்பர். அ + உ + ம + விந்து (. , புள்ளி) + நாதம். இங்ஙனம் ஐந்து கூறுகளின் கூட்டாக அமைந்த பிரணவ மந்திரம் சமஷ்டி பிரணவம் எனப்படுகிறது. (சமஷ்டி - கூட்டு). இது ஐந்து கூறுகளாகிப் பின் பஞ்சாட்சரமாக விரியும். இங்ஙனம் விரியும் நிலையிலுள்ள இது விய்'டிப் பிரணவம் எனப்படும். (வியஷ்டி -விரிதல்).

மந்திரங்களுக்கு முன் ஓம் சேர்த்து ஓதும் முறையுண்டு. ஓம் நமச்சிவாய, ஓம் விக்னேஸ்வராய என்பன உதாரணங்கள். ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது பீஜ மந்திரமாக இங்குள்ளது. (பீஜம் - வித்து, முளை). ஓம் சேர்த்து ஓதுவதால் குறிப்பிட்ட மந்திரத்தின் ஆற்றல் அதிகமாகிறது என்பர்.

திருவைந்தெழுத்தாகிய சிவயநம பிரணவ மந்திரத்தின் விரிவாகவுள்ளது. மந்திரங்களில் மேலான மந்திரமாகக் கொள்ளப்படும் இத்திருவைந்தெழுத்து, மந்திர வேந்து என்றும் போற்றப்படுகிறது. இதனால் சிவயநம என்ற இம்மந்திரத்துக்கு ஓம் சேர்த்து ஓதுவது தேவையற்றதும் பயனற்றதுமாகிறது. ஓம் சேர்த்துச் சொல்லக் கூடாதுஎன்ற கருத்தும் உண்டு. அதிசூக்கும, காரண, மகா காரண பஞ்சாட்சர மந்திரங்களுக்கு ஓம் சேர்த்துச் சொல்லுதல் கூடாது.

**இறுதியிலும் துணை**

மந்திரங்களில் மேலான மந்திரம் பஞ்சாட்சரம், சூக்கும பஞ்சாட்சரம் மந்திர வேந்து எனப் போற்றப்படுவது. இதன் மேன்மையைச் சம்பந்தப் பெருமானின் வாழ்வியல் நிகழ்ச்சி ஒன்றின் மூலம் அறியலாம்.

அவர் பிறந்த அந்தணர் குடும்பத்தின் குல வழக்கப்படி அவருக்கு உபநயனச் சடங்கு நடைபெறுகிறது. காயத்திரி மந்திரத்தை மேலான மந்திரமாகக் கொண்டு, அதனை ஓதி இச்சடங்கைச் செய்வது பிராமணகுல வழக்கம். உபநயனச் சடங்கு முடிந்தபின் வேதம் ஓதுவதற்கும் சடங்குகள் செய்வதற்குமான தகுதியை ஒருவர் பெறுகிறார். சம்பந்தப் பெருமானும் இச்சடங்கின் பின் வேதம் ஓதியும், வேதம் ஓதுபவரின் ஐயங்களைத் தீர்த்தும் அருள் வழங்கினார். காயத்திரி மந்திரம் உட்பட்ட அனைத்து மந்திரங்களுக்கும் மேலானது திருவைந்தெழுத்து மந்திரம் என்பதையும் தேவாரப் பதிகம் அருளிச் செய்து உணர்த்துகிறார். அவர் பாடிய இப்பதிகத்தில் உள்ள பின்வரும் பாடல் இது தொடர்பானது.

**மந்திர நான்மறை யாகி வானவர்**
**சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன**
**செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க் (கு)**
**அந்தியுள் மந்திரம் அஞ்செ முத்துமே!**

---

தெரியாமல் மிதித்தாலும் நெருப்பு சுடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலின் பொருள்: மந்திரமாகியும் நான்மறையாகியும் தேவர்கள் சிந்தையுள் நின்று அவர்களை ஆட்கொள்வது திருவைந்தெழுத்து செந்தீ வளர்த்து வேள்வி செய்யும் செம்மையான நெறியில் நிற்கும் வேதியருக்கு காலை, நண்பகல், மாலை ஆகிய சந்தியா காலங்களில் ஓதத் தகுந்த மந்திரம் திருவைந் தெழுத்து மந்திரம்.

அந்தியுள் மந்திரம் என்பதனால் அவர்களின் இறுதிக் காலத்தில் துணை நிற்கும் மந்திரம் திருவைந் தெழுத்தென்றால் பிறவில்லை என்பதும் பெறப்படுகிறது. இது அவரின் பிற பாடல்களாலும் தெளிவாகிறது. உதாரணத்துக்கு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பது அஞ்செ ழுத்துமே!

இது போன்ற பாடல்கள் மூலம் வாழ்வின் இறுதியில் துணை நிற்கும் மந்திரம் திருவைந்தெழுத்து என்பதை அவர் விளக்குவது சிந்தனைக்குரியது.

## முத்திக்கு வழி

சூக்கும பஞ்சாட்சரத்தை முத்தி பஞ்சாட்சரம் என்றும் சொல்வதுண்டு. நகரத்தை முதலாகவுடைய தூலபஞ்சாட்சரத்தை ஓதுவதால் உலக நலன் கிடைக்கும், இறையருள் கிட்டாது என்று கூறி, முத்தியை விளைபவருக்கு இது ஏற்றதல்ல என்ற கருத்து நூல்களில் காணக்கூடியது. சிகரத்தை முதலாகவுள்ள சூக்கும பஞ்சாட்சரத்தை ஓதுவதாலே முத்தி பெறலாம் என்ற கருத்தும் அவற்றில் உள்ளன. உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலில் இது தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இது குறித்த இரு பாடல்கள் வருமாறு :

நம்முதலா ஓதில் அருள் நாடாது நாடும் அருள்
சிம்முதலா ஓதுகநீ சென்று

---

*தெரியாமல் செய்த தீவினையும் துன்பத்தை தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி மலம் இரண்டும் ஆதியா ஓதினால்
சேதியா மும்மலமும் தீர்வாகா - போதம்
மதிப்பரிதாம் இன்பத்தே வாழலாம், மாறி
விதிப்படி ஓது அஞ்செழுத்துமே

உலக நலனுக்குத் தூல பஞ்சாட்சரம், இறையருளுக்குச் சூக்கும பஞ்சாட்சரம் என்ற கருத்துக்கான ஒரு விளக்கத்தை யாழ்ப்பாணத்துச் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் தமது Glories of Shaivaism (சைவத்தின் மகத்துவம்) என்ற நூலில் தருகிறார். அவர் உண்மை விளக்கக் கருத்தை ஏற்றுக் கொண்டு, அதற்கு மாறுபடாமல், பின்வருமாறு எழுதுகிறார்.

இவற்றில் ஒன்றில் (தூல பஞ்சாட்சரத்தில்) முதல் எழுத்து (ந) மலத்தை ஒடுக்குவது. மற்றையதில் (சூக்கும பஞ்சாட்சரத்தில்) முதற்பதம் சிவ. முன்னையது உலகியல் நாட்ட முள்ளவருக்கானது. அதில் தியானித்தால் அவர்கள் தமது உலகியல் நாட்டத்தைச் சிறிது சிறிதாக விட்டு இறையியல் நாட்டம் கொள்வார்கள். அதன்பின் இரண்டாவது மந்திரம் இறைநாட்டத்தில் ஈடுபடச் செய்து, இறையுடன் ஒன்றச் செய்யும். இதனால் இம்மந்திரம் முத்தி பஞ்சாட்சரம் எனப்படும். (தமிழாக்கம் கட்டுரை ஆசிரியருடையது).

## மலவாசனைக்கு மருந்து

ஆன்மீக வளர்ச்சியில் சிவோஹம்பாவனை (சிவ + அஹம் + பாவனை) முக்கிய இடம்பெறுகிறது. இது சிவனைத் தன் அகத்திலே கொண்டு, சிவனாகத் தன்னைப் பாவிக்கும் சிவனருள் உணர்வு தத்வ மஸி, அகம் பிரமாஸ்மி போன்ற வேத மகா வாக்கியங்கள் இதற்காகவே அமைந்தன. குரு தன்னையும் சிவமாகப் பாவனை செய்து மாணாக்கனையும் சிவமாகப் பாவனை செய்வதற்குத் துணை புரிபவை இம்மகா வாக்கியங்கள். நீ அது ஆகிறாய், நான் பிரம்மமாகிறேன், போன்ற பொருள்களில் அமைந்தவை இவை.

பரம்பொருளை எங்கோ இருப்பதாகக் கொண்டு அது என்று கூறுவது வேதங்களில் காணக்கூடியது. அது என்று கருதப்படும் பிரமத்தை இவன் என்றும் சிவன் என்றும் கொள்வது ஆகமத்தைச்

இளமையில் அடங்கிவாழ்வதுதான் இன்பத்தின் வேராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாகக் கொண்ட சைவ மரபு. இது அவன் திருவுரு இவன் அவன் என்பது திருவாசகத் தொடர்.

சார்ந்ததன் வண்ணமாதல் உயிரின் தன்மை. மனத்தோடு சேர்ந்திருக்கும் உயிர் நமப் பதமாக இருக்கிறது. இந்த நிலையிலிருந்து விடுபட்டு சிவப்பதமாக அது மாற வேண்டும். தத்தவமஸி வாக்கியம் போன்றது இது. நமசிவாய என்பதற்கு நமப்பதமாகிய நான் சிவமாக ஆகிறேன் என்று பொருள் காணலாம். இது அகம் பிரமாஸ்மி போன்றது. ஆகவே சிவாயநம, நமசிவாய ஆகியவை, வேதமகா வாக்கியங்கள் போன்று, சிவோகம் பாவனைக்கு ஏற்ற மந்திரங்களாகின்றன. மகாவாக்கியங்கள் இறைவனைச் சேய்மையில் இருப்பவனாகக் காட்ட, திருவைந்தெழுத்து அவன் உடனிருப்பவன் என்ற உணர்வையும் தருகின்றது. திருவைந்தெழுத்தை ஓதுவதால் சிவோஹம் பாவனை கைகூடி, தன்னுள்ளே சிவனைக் காணும் உயர்நிலை உண்டாகிறது.

இத்தகைய நிலையில் வளர்ச்சியுற்ற ஆன்மா மலபந்தம் நீங்கி இறைவன் திருவடியைச் சார்ந்திருக்கும். ஆயினும் சில வேளைகளில் முன்னர் அதனைப் பிணித்த மலவாசனையால் தாக்குற நேரும். இதிலிருந்து விடுபடத் திருவைந்தெழுத்தை ஓதல் அவசியம். ஐந்தெழுத்தை விதிப்படி எண்ண வேண்டும் என்று சிவஞானபோதம் ஒன்பதாம் சூத்திரம் கூறி இதனை விளக்குகிறது.

**அஞ்செழுத்து நடனம்**

ஆடும் பெருமானின் அருள் நடனம் குறித்து உண்மை விளக்கம் எனும் நூல் பலவாறு கூறுகிறது. அவனின் திருமேனி அஞ்செழுத்து வடிவமென்பதனைக் கேசாதி பாதம் வரையாகவும் (திருமுடியிலிருந்து திருவடி வரையிலும்) பாதாதி கேசம் வரையாகவும் விளக்குகிறது. திருவாசி ஓங்காரமான பிரணவமென்றும், அதில் பொருந்தி நீங்காதிருக்கும் ஐந்தெழுத்து அதில் நிறைந்த சுடர் என்றும் கூறுகிறது.

நடராசனின் திருநடனம் இரு நிலைகளில் நிகழ்கிறது. ஒரு நிலையில் ஆன்மாக்கள் உலகியலில் திளைத்து வளர்ச்சி பெறுவதற்காக நிகழ்கிறது. இது அவனின் ஊன நடனம் எனப்படும். இன்னொரு நிலையில் இறைஞானம் பெற்று முத்தி பெறுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்கிறது. இது அவனின் ஞான நடனம் எனப்படும். ஆன்மா இந்த இரண்டிற்கும் நடுவில் நின்று உலகியல் இன்பத்தையும் முத்திப் பேற்றையும் பெற வேண்டும். இதனை உணர்த்துவதாகப் பின்வரும் திருவருட்பயன் பாடல் உள்ளது.

**ஊன நடனம் ஒருபால் ஒருபாலாம்**
**ஞான நடனம் தான்நடுவே நாடு**

திருவைந்தெழுத்திலுள்ள நம என்ற பதம் ஊன நடனத்தைக் குறிப்பதாகவுள்ளது. சிவ என்ற பதம் ஞான நடனத்தைக் குறிப்பதாகவுள்ளது. ய என்ற பதம் குறிக்கும் உயிர் நடு நின்று ஊன நடனத்தின் பயனையும் ஞான நடனத்தின் பயனையும் பெறுகின்றது.

சொற்பதங் கடந்த தொல்லோன் ஆகிய சிவபெருமான் உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும் படான். அவன், திருவருளாலே ஆடரங்காகக் கொண்டு, திருவைந்தெழுத்தாகிய அருட்டிரு மேனியுடன் ஆடுகிறான். அத்தனின் இந்த நடனம் அம்மை காண ஆடப்படுகிறது. மிகு பஞ்சாச்சரம் என்னும் சூக்கும பஞ்சாட்சரத்தால் ஆகும், இவ்வாடலைப் போற்றி வழிபடுவருக்கு மீண்டும் பிறப்பில்லை. இதனால் பின்வரும் உண்மை விளக்கப்பாடல் விளக்குகிறது.

**பரைஇடமா நின்று மிகுபஞ் சாக்கரத்தால்**
**உரையுணர்வுக் கெட்டா ஒருவன் - வரைமகள்தான்**
**காணும் படியே கருணையுருக் கொண்டாடல்**
**பேணும் அவர்க்குண்(டு)டா பிறப்பு.**

---

உலகில் மனித இனம் தோன்றியபோதே இறைஞானமும் ஏற்பட்டு விட்டது.

மனிதன் பரிணாம வளர்ச்சி பெற்று ஆறு அறிவையும் பயன்படுத்தியபோது இறைவழிபாட்டுக்கான அவசியம் தானாகவே உருவாகியது

ஆதி மனிதன் மலை, ஆறு, கடல், குளம், மரம், செடி, கொடி, சூரியன், சந்திரன், காற்று தீ, வெய்யில், மழை ஆகியவை யாவும் இறைவனது அம்சம் என நம்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருவாசகத்தில் பிடித்தபத்து"

பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்

சைவசமயம் கொள்கையன்று; கோட்பாடன்று வாழ்க்கை நெறியே சமயம்; மக்கள் இறையுணர்வோடு வாழவேண்டும்; செயற்படவேண்டும் என்பதே நியதி. அவ்வாறு செய்யின் ஈற்றில் ஆன்மா இறைவனோடு ஒன்றித்துவிடும். அதன்பின் பிறப்பில்லை; இன்ப துன்பங்களில்லை; அன்பும் பக்தியுமே முத்திக்கு வழிகளாகும்.

பாசமும் நேசமும் விடுபட பக்தி அவசியம். 'பக்தி வலையிற்படுவோன் காண்க' என்றே மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார். பாசவேரை அறுத்தற்பொருட்டும் அவரைத் தாம் ஆட்கொண்டு குருவுபதேசம் செய்தற்பொருட்டும் பிரம்படி பெற்றும், தலையிலே சுமக்கப்பண்ணியும், மண்ணைக் கூடையிற் தாமேசுமந்தும், நரிகளைப் பரிகளாக்கியும், புத்தரை வாதில் வென்றும், கோவைபாடியும் செய்த திருவிளையாடல்கள், அற்புதங்களனைத்தும் மாணிக்கவாசகரது பாசவேரை அறுத்தற் பொருட்டு நிகழ்ந்த சம்பவங்களே. இது கடவுளின் தனித்துவம் என்கிறது திருவாசகம்.

மரத்திற்கு ஆணிவேர், பக்கவேர் என்று கூறுவது போன்று மாணிக்கவாசகரது உலகியற் துன்பங்களுக்கெல்லாம் காரணமானது 'பாசவேர்' உயிரோடுள்ள உயிரைப் பிரியாதுள்ள வேராகும். இது பாசமாகிய வேர் என விரியும்.

'வேரறுந்த மரம்', 'வேரறுந்த சமயம்', 'வேரறுந்த சமூகம்' என்னுந் தொடர்கள் செத்தொழிந்தில்லாது போவதையே சுட்டிக்காட்டுகின்றன. எனவே பாசமாகிய வேரை அறுத்தெறிந்து உயிராகிய ஆன்மாவை மாணிக்கவாசகராகிய தலைவியை - விடுதலையாக்கிவிடும் பழம்பொருளான 'ஞானாசாரியரான சபாநாயகரே' என்று வருவது காணத்தக்கது.

'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே' என்கிறது. சிவபுராணம் ஆரிய சிவனாக வடநாட்டுச் சிவனென மாணிக்கவாசகர் தனது கையறு நிலையை - 'புறம்புறந்திரிந்த செல்வராக நின்ற

---

*தொண்டனுக்கு துணை தொண்டேயாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையைத் தவிர்த்து - உன்னை விட்டு உம்மைச் சிக்கெனப்பிடித்த நிலையை விடுத்து - எங்கெழுந்தருளுவது இனி' என்று கதறிக்கதறிக் குழைந்து பாடும்பொழுது 'வாவென்ற வான்கருணை' செய்து (வான்கருணை - அசரீரி) (அசரீரி - சரீ மற்றது) பழம் பொருளாயும், புதுப்பொருளாயும் விளங்கும் குருமூர்த்தியாகிய உன்னையே சிக்கெனப்பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற தன்மையினை எனக்கருளி, எனது வழிபாட்டை, விண்ணப்பத்தை, விருப்பத்தை ஏற்று எனது சிந்தையுட் புகுந்து உமது வார்கழல்களாகிய பொன்னார் திருவடிகளாகிய - திருமாலும் காணமுடியாத புண்டரிகத்தினைக் காட்டியருளிய எம் தலைவரே, ஒளிபொருந்திய சோதியான விளக்கே செழுமை வாய்ந்த சுடராக விளங்கிநின்று, அறிவுக்கறிவாய் நின்ற மூர்த்தியே! செல்வமே! சிவபெருமானே! ஈசனான இறைவனே! உன்னையே சிக்கெனப்பிடித்தேன். மற்றுப்பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன், இதையும்விட 'இனி எங்குதான் யான்போய் அடைவேனோ' என்று மாணிக்கவாசகர் 'ஒன்றுண்டு விண்ணப்பம்' என வேண்டுதல் செய்து பந்தபாசங்களினின்றும் தேவரையடையும் 'முத்திகலப்பே' எனக்குக் கிடைத்தற்கரிய பெரும்பேறு என்கிறார் திருவாதவூரடிகளான மாணிக்கவாசகர்.

பல்வேறு உத்திமுறைகளைக் கையாண்டு தமது வீட்டின்பப்பேற்றை இரந்து நிற்கிறார் மாணிக்கவாசகர். இது அவரது வாழ்வின் தேவை.

**திருமூலர் திருமந்திரம்**

"பசுக்களைக் கட்டிய பாசமூன்றுண்டு
பசுத்தன்மை நீங்கிய பாசம் அறுத்தாற்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே" என்றும்

"பசுவும் பசுவொடு பாசமும் மேலைக் கதியும்" என்றும்

"பதியினைப் போல் பசு பாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பாசம்
பதியணுகிற் பசு பாசம் நிலாவே" என்றும்,

---

நாம் இறைவன் முன் தலைசாய்த்தால்
இயமன் நம் முன்னே தலை சாய்ப்பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மூன்றினை நீங்கினார் நீங்கினர்' என்றும்

திருவருள் சீவனிற் பதிய அது பிறப்பிலிருந்து விடுதலையடையும் அதுவே முத்திப்பேறு. இதற்குத் தயார் பண்ணுவதே சமயவழிபாடு.

மும்மலப் பாசம் பந்தித்து நிற்கும் முறையிலும் வேறுபாடுண்டு. ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களுமுடையவர் 'சகலர்' எனப்படுவர். மாயை நீங்கிக் கன்மமலமும், ஆணவ மலமுடையவர் 'பிரளயாகலர்' எனப்படுவர். மாயையையும் கன்மத்தையும் நீக்கி ஆணவமலம் மட்டுமே உடையவர் 'விஞ்ஞானகலர்' எனப்படுவர். பிரளயாகலர், விஞ்ஞானகலர்களுக்குப் பிறப்பு இறப்பில்லை. சகலர் யாவரும் ஒருபடித்தானவர்களல்லர். ஆன்மாவின் பக்குவ நிலைக்கேற்ப மலங்களின் செறிவு வித்தியாசப்படும்.

'ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்' என்பர் அப்பர் பெருமான். மாணிக்கவாசகர் ஞானநெறியில் நின்றவர். ஞானம் பக்திக்கு வழியாகும். முற்றிய பக்தியே ஞானம், அன்பின்றி அருளில்லை, அருளின்றி வீடில்லை, ஆன்மா பரிபக்குவமடையத் திருவருள் தானாக வந்து நம்மை ஆட்கொள்ளும் என்பதற்கேற்பவும், தானே வந்தெம்மைத் தலையழித்தாட்கொண்டருளி என்று தம்மை வலியவந்து - தேடிவந்து தமது பரிபக்குவ நிலையான தகைமையையும் தகுதியையுமறிந்து ஆட்கொண்டவனே என்று தன்னனுபவ வெளிப்பாடு - அனுபவத்தின் வெண்சூடு பிறக்க - மெய்யுணர்ந்து தத்துவப் பொருள் நிலைபெறுமாறு 'பாசவேரறுக்கும் பரம்பொருள்' என்று கூறுகிறார் என்பதும் சாலப் பொருந்துவதாகும்.

உயிர் என்றுண்டோ அன்று தொட்டு ஆணவமலமும் அதனோடு பரவியிருக்கிறது. இடைவந்து ஏறியதன்று ஆணவம் சகலத்தில் ஆன்மாவின் அஞ்ஞானத்திற்கும் நலன் எனது என்ற அகங்காரத்துக்கும் இதுவே கால், சிவ புராணத்தில் 'அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே' என்கிறார். கடவுளின் அரும்பொருள் குணங்கள் மாணிக்கவாசகரது அனுபவத்தினூடே இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. 'மூலமலமாய் அறிவு முழுதினையும் மறைக்கும்' என்கிறது சிவப்பிரகாசம்.

---

நினைப்பவர் மனதை கோயிலாகக்கொள்வது
இறைவனுடைய இயல்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதரிடத்து வலிமையுடையது ஆணவம் அது இருளினுங் கொடியது. அது உயிரின் அறிவு முழுவதையும் மறைக்கிறது. இறைவனின் அருட்சக்தியும் உயிரோடு நிற்கிறது. ஆனால் மலத்தைப் பரிபாகஞ் செய்கிறது. இது திரோதாயி எனப்படும். இத்திருவருள் ஈற்றில் ஆன்மாவைச் சிவத்தோடு கூட்டிவைக்கும். இவ்வானந்தக் கலப்பையே முத்திக் கலப்பையே மாணிக்கவாசகர் 'பாசவேர் அறுக்கும் பரம்பொருள்' என்றும் அதனைத் தந்த தலைவனைப் பாடிப்பரவி புகழ்ந்தேத்துகிறார்.

**'தத்துவப்பிரகாசம்'**

**'ஆணவாம் மலம் உயிரை அனாதியாக**
**அகத்துள்மணி அரவு செம்பிடை அமருங்களிம்பும்**
**பேணு நீர் உப்புடனே நெருப்படங்கும் விறகும்**
**பெருகுநெல்லில் தவிடும் பிறங்கு கண்ணில் இருளும்**
**காணுமது போலென்றும் ஒன்றாகி அனேகம்'**

என்கிறது காண்க

**'திருவுந்தியார்'**

**'பற்றை யறுப்பதோர் பற்றினைப் பற்றில் அப்**
**பற்றையறுப்பர் என்று உந்தீபற**
**பாவிக்க வாரார் என்று உந்தீபுற'**

என்கிறது.

யான், எனது என்னும் அகப்புறப்பற்றுக்களை நீக்கவல்ல இறைமைத் தன்மை இறைவனுக்கு மட்டுமே உண்டு ஆதலின் இறைவனையே பற்றுக்கோடாகக்கொண்டு அவ்வகப்புறப்பற்றுக்களை நீக்குதல் வேண்டும். அவ்விறைவனையும் அவனது திருவருளாலேயே காண காண இயலுவதன்றிப் பாவனையால் எய்த இயலாது.

'அவனருளாலே அவன்தாள் வணங்கி'

என்கிறது சிவபுராணம்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்கிறது திருக்குறள்.

'பற்றிநின்ற பாவங்கள் மாறவேண்டில்'

என்கிறது திருத்தாண்டகம்.

---

*அரிய புண்ணியத்தால் அடியார் நட்புக் கிடைக்கிறது.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பாவம் வினையறுப்பார் பாலாவியின் கரைமேல்'

என்கிறது தேவாரம்

'மற்றுப்பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்று சுந்தரர் தேவாரமும் 'அற்றது பற்றெனில் உற்றது வீடு' என்று திருவாய் மொழியும் 'யான் எனது அற்ற இடமே திருவடியாம்' என்றும் குமரகுருபரர் வாக்கும் ஈண்டு ஒப்பிட்டு உணர்தற்குரியனவாம்.

**'பற்றினுட் பற்றைத் துடைப்பதொரு பற்றறிந்து**
**பற்றிப்பரிந்திருந்து பார்க்கின்ற - பற்றதனில்**
**பற்றுவிடில் அந்நிலையே தானே பரமாகும்.**
**மற்றுமிது சொன்னேன் மதி'**

என்று திருக்களிற்றுப்படியாரும் விளக்கி நிற்கக் காண்க.

'பாயிருள் நீங்கி ஞானம்தனைக்காண்டல் ஆன்மரூபம்'
என்கிறது உண்மைநெறிவிளக்கம்.

எல்லாவுயிர்களிடத்தும் பரந்து கிடத்தலின் ஆணவ மலத்தைப் 'பாயிருள்' என்றார். ஆணவம் "பலரைப்புணர்ந்து மிருட்பார்வைக்குண்டென்றும் கணவர்க்குந் தோன்றாத கற்பு" எனத் திருவருட் பயன் இதன் தன்மையை விளக்கி நிற்கிறது.

(தொடரும்)


# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள் இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**GTA MALL, 5215 Finch Ave. E., Unit #123**

**TEL: 416-321-0285**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சும்மா இரு

## ஆத்மஜோதி நா. முத்தையா

'ஐயா அருணகிரி அப்பா உனைப்போல
மெய்யாக ஓர் சொல் விளம்பினர் யார்'

என்று தாயுமானவர் அருணகிரியாரைப் பாராட்டி வியப்படைகிறார். அருணகிரியார் சொன்ன மெய்யான சொல் யாது? சும்மா இரு என்பதாகும்.

**"சும்மா இரு சொல் அற என்றலுமே**
**அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே"**

யோகர்சுவாமிகள் தம்மிடம் வந்த பக்தர்களுக்குச் செய்த அருளுபதேச மந்திரமும் இதுவேயாகும். கௌரி பாலா சுவாமிகள் எமது குருநாதனிடம் பெற்ற அருளுபதேச மந்திரத்தை அதாவது 'சும்மாஇரு' என்பதனைத் தமது கையிலே அழியாத மையினால் பொறித்திருப்பதை இன்றும் நாம் காணலாம் சும்மா இருக்கும் சுகத்தை அருணகிரியார் கந்தர்அலங்காரத்தில் 'சொல்லொணாதிந்த ஆனந்தமே' என்று குறிப்பிடுவார்.

**"சொல்லுகைக் கில்லைஎன்று எல்லாம் இழந்து சும்மா இருக்கும்**
**எல்லையுட் செல்ல எனைவிட்டவா"** என்றுங்கூறுவார்.

இத்தகைய அனுபூதியை எண்ணியே,

**"ஆதாளியை ஒன்று அறியேனை அறத்**
**தீதாளியை ஆண்டது செப்புமதோ"** என்றுங் கூறுவார்.

சும்மா இருப்பது என்பது என்ன? செயல்அடங்கி, பேச்சு அடங்கி மனம் அடங்கி இருப்பதையே சும்மா இருத்தல் என்பர். இந்த மூன்றையும் காஷ்டமௌனம், வாக்குமௌனம், மனோமௌனம் என்று கூறுவார் ஆசையற்ற இடத்தில் பேசா அநுபூதி பிறக்கும் என்று கூறுவார்.

இறைவனுடைய அருளைத் தேடிச்செல்கிறவர்கள் அதனைப் பெறுவதற்கு என்ன என்னவோ முயற்சி செய்கிறார்கள் அதை அடைந்த மாத்திரத்தில் சொல்அடங்கி, செயல் அடங்கி மனமடங்கிச் சிதாகாசப் பொருளோடு ஒன்றுபட்டுச் சும்மா இருக்கிறார்கள். அது வரைக்கும் அவர்கள் பல பேசியிருக்கலாம். ஆனால் அனுபவத்தில் ஈடுபடும் போது எல்லாம் அடங்கிவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகர்சுவாமிகள் இந்தச் சும்மா இருக்கும் சுகத்தை நன்கு அனுபவித்தவர்கள் ஆதலாலேதான் தாம்பெற்ற இன்பத்தைத் தம் அடியார்களும் பெறவேண்டும் என்ற கருணையினால் சும்மா இரு என்ற அருள் அனுபவத்தை பவத்தைத் தம் பக்தர்களுக்கு உபதேசஞ் செய்தார். எங்கே மௌனம் தொடங்குகிறதோ அங்கே ஞானம் நிறைவு அடைகிறது. "மோனம் என்பது ஞான வரம்பு" என்று சொல்வார்கள். வாய் பேசுகின்றபோது அதனை 'அநுபூதிநிலை' என்று சொல்ல முடியாது. அநுபூதி பெற்றவர்கள் மௌனமாக இருந்து பிறகு உலகம் உய்யவேண்டுமென்று சிலவற்றைச் சொல்வார்கள். யோகர்சுவாமிகள் சும்மா இருக்கும் சுகத்தை அனுபவித்து அதிற் பெற்ற அருளனுபவத்தை மக்களுக்குக் கூறுவதற்காக மேல்நிலையில் இருந்து கீழிறங்கி நற்சிந்தனை உபதேசங்களைச் செய்தருளினார்கள்.

வெண்காயம் சாப்பிட்டவன் ஏப்பம் விடும் போது வெண்காய வாசனை வருவது போலச் சும்மா இருக்கும்நிலையில் சுகம் அனுபவித்த சுவாமிகள் நற்சிந்தனை முழுவதிலும் அதனையே படரவிட்டுள்ளார்கள்.

"வாக்கிறந்த இன்பந்தந்தான்" "நாமேநாம் என்றுரைத்தான்" "தாமேதாம் என்றுரைத்தான்"

என்பனபோன்ற அருளனுபவங்கள் அவர்தம் குருநாதனிட மிருந்து பெற்றுக் கொண்டவையாம். சுவாமிகள் தாம் பெற்ற அனுபவங்களை யெல்லாம் குருநாதரிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவே கூறுவார். சுவாமிகளுடைய குருநாதரை விசர்ச் செல்லப்பா என்றால் தான் பொதுமக்களுக்குப்புரியும். விசர்ச்செல்லப்பாவை ஒரு கடைக்காரர் ஒருநாள் ஒரு கொட்டிலுக்குள் கட்டிவைத்துவிட்டார். யோகர்சுவாமிகள் அந்தக் கொட்டிலையே தமது சாதனா மண்டபமாக்கிக் கொண்டார். உலக மக்களிடமிருந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காக மகான்கள் ஆடும் நாடகம் இதுவாகும். அவர்கள் சும்மா இருந்து அனுபவிக்கும் சுகத்தை இலௌகீகர்கள் கெடுத்துவிடுகிறார்கள், விசர்வேடம் பூண்டுவிட்டால் பொதுமக்கள் அங்கே ஒரு விசர்நாய் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டே ஒதுங்கிப் போய்விடுவார்கள். மகான்கள் தமது உண்மை

*நீ மனதின் கட்டுப்பாட்டில் வந்தால் அழிவுதான் வரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையைக் காட்டிவிட்டால் அவர்களது உடம்பிலுள்ள மயிர்களையே பிடுங்கிக் கொண்டுபோய்த் தீர்த்தம் ஆடவும் பின்னிற்கமாட்டார்கள்.

ஒரு முயற்சியும் இன்றிப் பணம் நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்று பொதுமக்களில் பலர் விரும்புகிறார்கள். பாடுபட்டு உழைத்து அந்தப்பயனில் இன்பம் காணவேண்டும் என்று முயற்சிப்போர் மிகக்குறைவு. இதேபோல்தான் வெளியில் ஓடிச்செல்லும்போது ஒரு நிமிட நேரம் மகானைத் தரிசித்துத் தானும் மகானாகிவிட வேண்டும் என்று நினைப்பவர் அநேகர். மகான்கள் அந்தநிலையை அடைவதற்கு எவ்வளவு சாதனைகள் செய்தார்கள், எத்தனை சற்சங்கம் செய்தார்கள் என்று சிந்திப்பதே இல்லை. உள்ளத்திலுள்ள அழுக்காறு, ஆசை, கோபம் ஆகியவற்றில் எதையும் தியாகம் செய்யாமலே மகான்களாகி விடவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

இன்றைய மக்கள் நீரில் இறங்காமலே நீச்சல் பழகவேண்டும் என்று விரும்புகிறார்கள். வைத்தியனிடம் செல்லாமலே வைத்தியன் தங்கள் வீட்டுக்கு மருந்தை அனுப்பிவைக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். சாதனை இல்லாமலே சாத்தியம் ஏற்படவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

**"எண்ணம் யாவும் இறந்திட வேண்டும்"**
**"நிசசொரூபம் அறிந்திட வேண்டும்"**
**"ஊன்றுபாதத்துறங்கிட வேண்டும்"**
**"தூண்டு சோதி விழுங்கிட வேண்டும்"**
**"எங்குந்தெய்வத்தைக் கண்டிட வேண்டும்"** என்பன விசர்ச் செல்லப்பா தனக்குத் தந்த சொத்துக்கள் என்று சுவாமிகள் கூறுவார்கள்.

வேதங்களின் சிகரமாய் அமைந்தவை உபநிஷத்துக்கள். உபநிடத்துக்களின் சாரமே சும்மா இரு என்பது. ஜனகாதி நால்வரும் கற்கவேண்டியன எல்லாம் கற்றபின் தாம் கற்றது ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வந்தார்கள். இறைவனிடம் சென்றார்கள். இறைவனார் வாய்திறந்து ஒரு வார்த்தை பேசவில்லை. கல்லாலின்கீழ் தெட்சணாமூர்த்தியாக இருந்தார்கள். சீடர் நால்வரும் தெட்சணாமூர்த்தி சொல்லாமல் சொன்னதைத் தமக்குள்ளே ஆனந்தமாக அனுபவித்தார்கள்.

---

எதற்காகவும் உண்மையில் இருந்து விலகாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்ற கேள்வி**
**வல்லார் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப்பாலாய்**
**எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்துகாட்டிச்**
**சொல்லாமற் சொன்னவரை நினை யாமல் நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்**

என்று கூறியருளினார் பரஞ்சோதிமுனிவர்.

எல்லாம் சிவமயமாக இருக்கும்பொழுது இறைவனைக் காட்டிலும் ஆத்மா வேறான தத்துவமாக ஆகமுடியாது. ஆத்மாவேதான் இறைவன், இறைவனேதான் ஆத்மா. இந்த இரகசியத்தைத் திருமூலர் 'கடவுளும் நானும் ஒன்று' என்று அத்வைத ஞானத்தைப் போதிக்கின்றார். வேதங்களும் சாஸ்திரங்களும் அத்வைத ஞானத்தில்தான் லயம் பெறுகின்றன. அந்த உயர்நிலை அடைந்தவன்தான் பிரம்மானந்த நிலையை அனுபவிக்கிறான். இறைவனே ஆத்மா என்ற தத்துவத்தைவேதம்.
"அயமாத்மா ப்ரஹ்மா, தத்வமஸி" என்று குறிப்பிடுகிறது.
இவ்வளவு கரடு முரடான தத்துவத்தைச் சுவாமிகள் இனிய எளிய தமிழில். 'சும்மா இரு' என்று அருளிச்செய்தார்கள்.

**'அத்துவிதப் பொருள் காப்பாம்'**
**"அத்துவிதப் பொருளை அறிவுக்கறி வானதொன்றைச்**
**சித்தத் திலே நீவைத்து - சின்னத்தங்கம்**
**சந்தேகந் தீர்த்திடடி"**
**"அத்துவிதப் பொருளை அருந்தவர்கட் காரமுதைச்**
சித்தத்துட்கண்டு தெளியவா என்மனமே"

என்ற நற்சிந்தனைகள் அடிக்கடி நம் உள்ளத்தில் சிந்திக்க வேண்டியவைகளாகும்.

---

*அளவுடன் பேசுபவன் அறிஞனாகிறான்.*

*கற்றும் கற்றபடி நடவாதவன்*
*கடவுளை விட்டு விலகிச் செல்கிறான்.*

*மனிதனை இறைவனோடு இணைப்பது பிரார்த்தனை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மீகக் கணக்கு - பாடம் பூச்சியம்
# Spiritual Mathematics – Lesson - Zero

சைவசித்தாந்தரத்தினம் ஆ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லியதையும் சொல்லாது மோனத்து உணர்த்தியதையும் எழுதுவது டாக்டர். இ. லம்போதரன்

குழந்தைகளுக்கு ஒரு விளையாட்டு நம்பர் (number) விளையாட்டு (ஆன்மீகத்தில் நாம் எல்லோரும் குழந்தைகள் தாம்) எங்கே ஒன்றில் இருந்து சத்தமாக எண்ணுங்கள் பார்க்கலாம்.
ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது பத்து - இல்லை, இல்லை தப்பு

ஒன்பதிற்குப் பின்னால் பூச்சியம் அல்லது பூரணம். கணக்கில் ஒன்று தொடக்கம் ஒன்பது வரைதான் இலக்கங்கள் உண்டு. அதன் பின் பூச்சியம் இந்த பூச்சியம் அல்லது பூரணம் இந்துக்கள் கணிதத்துக்கு கொடுத்தது. This is the contribution by the ancient Hindus to the field of mathematics.

இந்தப் பூச்சியம் அல்லது பூரணம் ஒரு விசேடமான இலக்கம் அது எப்படி? ஒன்றிற்குப் பக்கத்தில் ஒரு பூச்சியத்தைப் போட்டால் பத்து ஆகிறது. $1 \rightarrow 10$ ஒன்றிற்குப் பக்கத்தில் இரண்டு பூச்சியங்களைப் போட்டால் நூறு ஆகிறது. $1 \rightarrow 100$ மூன்று பூச்சியங்களைப் போட்டால் ஆயிரம் ஆகிறது. $1 \rightarrow 1000$

ஒரு கணக்குப் போடுவோமா? எங்கே ஒருபூச்சியத்துடன் மேலும் பல பூச்சியங்களைக் கூட்டுங்கள் பார்ப்போம் 0+0+0+0+0+0+0+0+0+0+0... = 0 பூச்சியம்தான்விடை

இன்னொரு கணக்குப் போடுவோமா? பூச்சியத்தில் இருந்து பல பூச்சியங்களைக் கழியுங்கள் பார்க்கலாம் 0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0-0--- = 0 பூச்சியம்தான்விடை

இப்போது விளங்குகின்றதா பூச்சியம் ஏன் ஒரு விசேடமான இலக்கம் என்று? பூச்சியம் ஒன்றுமே இல்லாத ஒன்றைக் குறிக்கும் இலக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் மிகவும் பெறுமதி அளிக்கும் இலக்கமும் கூட பூச்சியம் அல்லது பூரணத்துடன் எத்தனை பூச்சியங்களைக் கூட்டினாலும் பூச்சியம் அல்லது பூரணத்தில் இருந்து எத்தனை பூச்சியங்களைக் கழித்தாலும் பூச்சியம் தான்.

கடவுளும் இவ்வாறே கடவுளிடம் இருந்து எத்தனை சீவன்கள் வந்தாலும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் கடவுள் பூரணமாகவே இருக்கின்றார். கடவுளிடம் எத்தனை சீவன்கள் சென்றடைந்தாலும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் கடவுள் பூரணமாகவே இருக்கிறார்.

தாக்கியே தாக்காது நின்றது ஓர் தற்பரம் - திருவுந்தியார், மெய்கண்ட சாத்திரம் போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆகிநீ தோற்றம் இல்லாய் - திருவாசகம்.

**சிவம்சக்தி தன்னை ஈன்றும்**
**சத்திதான் சிவத்தை ஈன்றும்**
**உவந்து இரு வரும்பு ணர்ந்து இங்கு**
**உலகுஉயி ரெல்லாம் ஈன்றும்**
**பவன்பிர மசாரி யாகும்.**
**பான்மொழி கன்னி யாகும்.**
**தவந்தரு ஞானத் தோர்க்கு இத்**
**தன்மைதான் தெரியும் அன்றே**

சிவஞானசித்தியார், அதிகரணம் 2

பாடல் 77

**பூர்ணமதஹ் பூர்ணமிதம்**
**பூர்ணாத் பூர்ண முதத்யதே**
**பூர்ணஸ்ய பூர்ண மாதாய**
**பூர்ண மேவா வஷிஸ் யதே**

கணக்கு விளங்குகின்றதா? அடுத்த முறை இலக்கம் ஒன்றைப் பற்றிப் பார்ப்போம்

---

*ஆண்டவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாவே அரியகாரியங் களைச் செய்ய முடியும்.*

*நம்முடைய சிந்தனை சொல் செயல் யாவற்றிலும் தெய்வீகம் திகழ வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மீகக் கணக்கு - பாடம் ஒன்று
## Spiritual Mathematics – Lesson One

சித்தாந்தரத்தினம் ஆ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொல்லக் கேட்டு ஞாபகப் பதிப்பில் இருந்து எழுதியது
டாக்டர் இ. லம்போதரன்

ஒன்று என்றால் ஒருவன் கடவுள் ஒன்றே. அதற்கு நிகராக ஒப்பாக இரண்டாவது இல்லை. அதற்கு சிவம் என்று சைவம் பெயரிட்டுள்ளது. ஒன்று என்றால் சிவம் 'ஒன்றவன் தானே' என்று திருமந்திரம் தொடங்குகின்றது.
ஒன்றே குலம் ஒருவனே தேவன் - திருமந்திரம்

அவனைப் பற்றி அறிய முடியுமா? முயற்சி செய்யலாம். உங்கள் எல்லோருக்கும் உங்களைப் பற்றி தெரியும் இல்லையா? உனக்கு உன்னைப் பற்றித் தெரிந்தால் இறைவனை, சிவத்தைப் பற்றித் தெரிந்து கொள்வது சுலபம். அது எப்படி? சிவம் உனக்கு நேர் எதிரானது.

உனக்கு ஒரு உருவம் இருக்கிறது இல்லையா?
கடவுளுக்கு உருவம் இல்லை – Formless
உனக்கு ஒருநிறம் இருக்கிறது இல்லையா?
கடவுளுக்கு நிறம் இல்லை – Colourless

உனக்கு சிறிதளவுக்கு அறிவு இருக்கின்றது. இல்லையா?
கடவுளுக்கு பேரறிவு – Omniscient
நீ ஒரு சிறிய இடத்தை எடுத்து அமர்ந்திருக்கிறாயா?
கடவுள் எல்லா இடத்திலும் அமரந்திருக்கிறான் - Omnipresent
உனக்கு சில ஆற்றல்கள், திறமைகள் இருக்கின்றனவா?
கடவுள் எல்லா ஆற்றல்களும் உடையவர் - Omnipotent
உன்னிடம் அழுக்கு அல்லது மாசு இருக்கின்றது இல்லையா?
கடவுளுக்கு மாசு அல்லது மலங்கள் இல்லை - நிர்மலன்

அறிந்தவர்கள் இந்த ஒப்பற்ற ஒன்றிற்கு முக்கியமாக எட்டு குணங்கள் கூறியிருக்கின்றார்கள்.

1. தன்வயத்தனாதல் - Self Dependance

---

பொய்மை எப்போதாவது வெளிப்பட்டு விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தூய உடம்பினன் ஆதல் - Pure Body

3. இயற்கை உணர்வினன் ஆதல் - Natural and Eternal Understanding

4. முற்றும் உணர்தல் - Omniscience

5. இயற்கையாகவே பாசங்களின் நீங்கியவன் - By Nature Free from Bonds

6. பேரருள் உடைமை – Infinite Grace

7. முடிவில் ஆற்றல் உடைமை – Infinite Potency

8. வரம்பில் இன்பம் உடைமை – Infinite Bliss

**கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்**
தாளை வணங்காத் தலை
என்று உலகப் பொதுமறை நூலாகிய திருக்குறள் கடவுளுக்கு எட்டுக்குணங்கள் கூறுகின்றது.

இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். எமக்கு எம்மைப் பற்றித்தெரிந்தால் அதற்கு நேர் எதிரான கடவுளைப் பற்றி இப்படி ஊகித்து உணர முயலலாம். இந்த ஒப்பற்ற ஒன்றை சிவம் என்பர் சைவத்தில். விஞ்ஞானத்தில் பௌதிகத்தில் இதைத்தான் வைப்புச்சக்தி Potential Energy என்கிறோம். இதை அண்டப்பேரறிவு Cosmic Consciousness என்றும் சொல்வார்கள். வைப்புச்சக்தி என்றால் ஒத்துக்கொள்கிறோம். சிவம் இருக்கிறது என்றால் இல்லை என்று வாதம் புரிகிறோமே: அது ஏன்? அது தமிழில், சைவத்தில் அதற்குவைத்த பெயர். அதில் தவறு ஒன்றும் இல்லையே எங்களுக்குப் பிடிக்காவிட்டால் வேறு பெயரை வைத்துக்கொள்ளலாம். அதற்காக இருப்பதை இல்லை என்று சொல்ல முடியுமா?

---

இயற்கை வழிபாட்டின் பரிணாம வளர்ச்சியே இறைவழிபாடாக பரிணமித்தது.

மனிதனின் அறிவு வளர வளர இறைவனைப் பாடினால் ஆத்ம பலம் உண்டாகும், ஆத்மாவுக்கு உயர்வு கிடைக்கும், என்ற உண்மை மனித சமுதாயத்திற்கு விளங்கியது.

மனம் அடங்கினால் சினம் அடங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் தமிழும் பக்தி நெறியும்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம்

**பக்தி நெறி**

பக்தி என்பது தான் இறைவன் என்ற இரண்டிலும் ஓர் ஒருமை ஏற்பட்டதாக உணர்கின்ற உணர்வே ஆகும். உண்மைச் சமயத்தின் உயிர்நாடியாகத் திகழ்வது பக்தியே ஆகும். இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி ஆகும். ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு ஒன்றை மட்டும் ஆன்மா விரும்பி நிற்பதே பக்தி எனப்படும். பக்தி செய்வது என்பது மனித நேயத்துடன் உடலாலும் வாக்காலும் மனத்தாலும் இறைத்தொண்டு மேற்கொள்வதும் பாடிப்பரவுதலும் ஆகும்.

**ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நினைத்தேடுவதும்**
**நின் அடியார் செய்கை பராபரமே**

எனத் தாயுமான சுவாமிகளும் இந்த வழிபாட்டு நெறியினைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

இறைவனைச் சென்று அடைவதுதான் உயிர்களின் குறிக்கோள், பற்றுக்களிலிருந்து விடுபட்டவன் பந்த பாசங்களை அறுத்தெறிந்து பொய்த்தோற்றங்களைப் புறக்கணித்து மெய்ஞானம் பெற்று இறைவன் அருகில் சென்று அடைகிறான்.

இறைவனிடம் பற்றுதல் வைக்கும்போது மற்ற உலகியற் பற்றுக்கள் தாமே உதிர்ந்து விடுகின்றன. அன்பு மயமாக மாறி விடுகிறான். இறைவன் வேறு தான் வேறு என்றில்லாமல் இறைவனோடு இரண்டறக்கலந்து விடுகின்றான். பக்தன் ஒருவனே எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் பண்பு பெற்றவன்.

தென் இந்தியாவில் மலர்ந்த பக்தி இயக்கம் பாரத நாடு முழுவதும் பரவி ஒரு பெரும் புரட்சியை உருவாக்கியது. முந்தைய கொள்கைகளை தவிடுபொடியாக்கியது. வினையை அனுபவிக்கத்தான் வேண்டும். பிறவிச் சக்கரத்தில் உழல்வதைத் தடுக்க முடியாது என்று கூறிய கருத்துக்களை பக்தி இயக்கம் மறுத்தது. 'வினையை மாற்ற முடியும். போக்க முடியும். முற்றிலுமாக அழிக்க முடியும். இப்பிறவியில் முடியாவிட்டாலும், இப்பிறவியில் பக்தி செய்து, அடுத்த பிறிவியிலாவது பிறவியை அறுக்க முடியும். என்று பக்தி இயக்கம் நம்பிக்கை ஊட்டியது.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியை அறுப்பதற்குக் கிடைத்த சாதனமாகவே உடலைக் கருதினர். ஊனுடம்பினைக் போற்றினர். இவ்வுடம்பில் இறைவன் குடி கொண்டிருப்பதாக எண்ணிப் பெருமைப்பட்டனர்.

உ-ம்:- 1. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் - திருமந்திரம்
2. உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்.
உடம்பினுள்ளே உறுபொருள் கண்டேன் - திருமந்திரம்
3. மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே
- அப்பர் தேவாரம்.
4. தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடோணாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு
கொண்டேன் - அப்பர் தேவாரம்-

தமிழகத்தில் காரைக்காலம்மையாரால் ஆரம்பிக்கப்பெற்ற சைவ பக்தி இயக்கத்தினைச் சம்பந்தரும், அப்பரும் பல்லவர் காலத்தில் முன்னெடுத்துச் சென்றனர். சம்பந்தரும் அப்பரும் ஒரே காலத்தில் வாழ்ந்தார்கள். பல்லவ காலத்தில் சைவசமய மறுமலர்ச்சிக்கு அப்பரடிகள் வித்திட்டபின் பாண்டிநாட்டில் சைவத்தின் வளர்ச்சிக்கு சம்பந்தர் பணியாற்றினார். சம்பந்தரை அருட்கடல் என்றும், அப்பர் பெருமானை அன்புக்கடல் என்றும், இவர்கள் இருவரையும் சைவநெறி பெற்ற புண்ணியக் கண்எனவும் சேக்கிழார் பெரிய புராணத்தில் போற்றுகின்றார்.

**அருட் பெருகு தனிக் கடலும் உலகுக்கெல்லாம்.**
**அன்பு செறி கடலுமாம் எனவும் ஓங்கும்**
**பொருட் சமய முதற் சைவ நெறிதான் பெற்ற**
**புண்ணியக் கண் இரண்டெனவும் புவனம் உய்ய**
- பெரியபுராணம் -

சைவ, வைணவ மதங்களின் அடிப்படைப் பக்தி மார்க்கமே தமிழ் நாட்டிலே சமண பௌத்த மதங்கள் நிலைகுலையக் காரணமாக அமைந்தன. உடலை வருத்திச் செய்யும் செயற்பாடுகளினாலேதான் முத்தியை அடைய முடியும் என்ற சமண, பௌத்த கோட்பாட்டினைவிடப் 'பக்தியினாலே முத்தி எளிதாகும்' என்னும் சைவ, வைணவரின் கொள்கை நாளடைவில் மக்கள் மனதைக் கவர்ந்தது.

---

*வீழ்ச்சிக்கு வித்து நமது மடமையே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமண, பௌத்த மதங்களின் போதனைகள் மக்களின் அறிவைப் பிரமிக்கச் செய்தனவே ஒழிய அவர்களுடைய இதயத்துடன் ஒட்டியுறவாடவில்லை. பொது மக்களாலே பின்பற்ற முடியாத அவர்களுடைய நோன்புகள் பழக்க வழக்கங்கள், யாக்கை நிலையாமை பற்றிய கோட்பாடுகள் பக்தி மார்க்கத்தை தழுவியவர்களால் கண்டிக்கப்பட்டன.

உலகியல் வாழ்க்கையை இந்து சமயம் சாபக் கேடென்றோ தண்டனையென்றோ குறிப்பிடவில்லை. வரப்பிரசாதம் என்றே கூறுகிறது. மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் என்றே ஞானக் குழந்தையாகிய சம்பந்தரும் கூறுகிறார்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் முன்னின்று மக்களுக்கு நல்லசெந்நெறிகளைக் காட்டுவதற்காக இப்பக்தி மார்க்கத்தினை இயக்க பூர்வமாக மக்களிடையே பரப்ப வேண்டியவர்களானார்கள். சமண பௌத்தர்களுடைய அரசியல் செல்வாக்கு இவர்களை மூர்க்கமாக எதிர்க்கலாயிற்று. ஆனால் மக்களாதரவு பெற்ற மார்க்கமாக பக்தி பரிணமித்ததால் அவர்களுடைய எதிர்ப்புச் சோர்ந்து போயிற்று. இறைவன்மேற் கொண்டதிடமான பக்தி எவ்வித எதிர்ப்புக்களையும் முகம் கொள்ள அடியார்களுக்கு உதவிற்று.

தேவார முதலிகள் மூவரும் உலகியல் வாழ்க்கை சார்ந்த பன்முகப்பிரச்சினைகளுக்கும் ஈடு கொடுத்துச் சிவநெறியைப் பேணியவர்களாகத் திகழ்ந்தார்கள். சம்பந்தரும் அப்பரும் தலயாத்திரையாகத் தமிழ் நாட்டின் பல்வேறு கிராமங்களுக்கும் சென்று இசையுடன் கூடிய பாடல்களால் இறைவனைப் பாடிச் சிவமணம் பரப்பியதன் மூலம் சைவ பக்திப் பேரியக்கத்தை வெற்றிகரமான மக்களியக்கமாக மாற்றி வரலாற்றுச் சாதனையைப் புரிந்தார்கள். சுந்தரர் தலயாத்திரை செய்து தமிழோடிசை பாடியதோடு அமையாமல் சைவ பக்திப் பேரியக்கத்திற் பங்கு கொண்ட அடியார்களின் பெயர்களையும் அவர்களின் சாதனைகளையும் தொகுத்ததன் மூலம் வரலாற்றுப் பணியும் புரிந்தார். அவருடைய திருத் தொண்டத் தொகை சைவ பக்திப் பேரியக்கம் தொடர்பான முதலாவது தகவல் தொகுப்புப் பணியாகவும் திகழ்கிறது.

சிவநெறியைப் பேணிக் கொள்வதற்காகத் தமது உயிர், உடல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமை அனைத்தையும் தியாகம் செய்ய முயன்ற சாதனை வீரர்களின் செயற்பாடே சைவ பக்திப் பேரியக்கமாக மலர்ந்தது.

## திருமுறைப் பாடல்களின் சிறப்பு

இறைவனுடைய திருவருளுக்குப் பூரணமாக ஆட்பட்ட அருளாளர்கள் மொழிந்த தெய்வத்தன்மை பொருந்திய மந்திர வாசகங்களின் தொகுப்பாகவே பன்னிரு திருமுறைகளும் காணப்படுகின்றன. இவை இறைவனை போற்றித் துதிக்கக் கூடிய அர்ச்சனைமலர்களாகத் திகழ்கின்றன. இந்து சமயத்தின் மூல நூல்களாகிய வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள் என்பவற்றின் சாரமாகவே பன்னிரு திருமுறைகளும் உள்ளன என்பது அறிஞர்கள், ஆய்வாளர்களின் கருத்தாக அமைந்துள்ளது. வேதத்தின் சாரமாகத் தேவாரமும் உபநிடதங்களின் சாரமாக திருவாசகமும் ஆகமங்களின் சாரமாகத் திருமந்திரமும் காணப்படுகின்றன. வேதங்களிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களையும் தேவாரங்களிற் கூறப்பட்டனவற்றையும் ஒப்பிட்டுத் தேவாரம் வேதசாரம் என்ற ஆய்வு நூல் ஒன்றை மகான் காசிவாசி செந்திநாதையர் எழுதியுள்ளார். இந்துக்களின் ஞானக் களஞ்சியம் எனப் போற்றப்படும் உபநிடதங்களின் சாரமாகவே மணிவாசகப் பெருமான் அருளிய தெய்வவாசகமாகிய திருவாசகம் காணப்படுகிறது என்பதை திருவாசகத்திற்கு உரை எழுதிய சுவாமி சித்பவானந்தர் பல உதாரணங்களுடன் விளக்கியுள்ளார். சிவாகமங்கள் இருபத்தெட்டில் ஒன்பது ஆகமங்களின் சாரமாகவே தவயோகி திருமூல நாயனாரின் திருமந்திரம் அமைந்துள்ளது.

சிவபெருமான் திருமுறை ஆசிரியர்களின் ஊடாக சற்குரு மூர்த்தங் கொண்டு அருளிச் செய்தவையே பன்னிரு திருமுறைகள் ஆகும். திருமுறைகள் அனுபவ வாக்குகள் மட்டுமல்லாது அவை வாழ்வியல் நூலாகவும் அறம் தளைக்கும் அறநூலாகவும் மெய்ப் பொருள் நூலாகவும் காணப்படுகின்றன. திருமுறைகள் என்னும் பெயர் இறையருள் பெற்ற அருளாளர்களால் தாம் எய்திய இறையனுபங்களாக வெளிப்படுத்தப்பெற்று பயில்வோரைத் திருவருள் நாட்டமுடையோராய்ச் செய்து பயன் எய்துவிக்கும் நூல்களாகவும் விளங்குகின்றன.

திருமுறைகளைப் பாடி இறைவனை வணங்கினால் திருகலாகிய சிந்தை திருந்தும். தவம் பெருகும் பரமாயதோர் ஆனந்தம் கிடைக்கும்

---

*வெறுப்பு மனதை பாழ்படுத்திவிடும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் தீரும். வினை முற்றிலும் கெடும் வீடு பேறு எளிதாகும். உலகம் உயிர், இறைவன் என்ற முப்பொருளையும் முறையாகத் தருவன திருமுறைப்பாடல்கள். திரு என்ற சொல் செல்வம். இறை, அழகு, ஒளி பொலிவு, தெய்வத்தன்மை, நல்வினை போன்ற பல பொருட்களைக் கொண்டுள்ளது. உடல் சார்ந்த இவ்வுலக வாழ்விற்கு செல்வமாக அமைபவை சிலவாகும். ஆனால் உயிருக்கு செல்வத்தையும் அழகையும் ஒளியையும் பொலிவையும் தெய்வத் தன்மையையும் நல்வினையும் தர உதவியாக இருப்பன திருமுறைகள் உயிருக்கு ஒழுங்கையும் அதனால் வருகின்ற ஒழுக்கத்தையும் உயிருக்கு இறைவனோடுள்ள உறவையும் உயிர் இறைவனோடு கலக்கின்ற கூட்டையும் அதனால் உயிருக்கு ஏற்படுகின்ற நன்மைகளையும் திருமுறைகள் எடுத்துக்கூறுகின்றன.

சைவ சமயிகளாகிய எங்களுக்கு வாரா வரத்தாய் வந்து கிடைத்த மூலதனம் சைவத் திருமுறைகள். நம்மவர்களுக்குச் சிவபெருமானால் சைவ மானியமாக விடப்பட்ட விளைநிலம் திருமுறைகள் என்பதும் பொருந்தும். வெறுமனே தோத்திர நூல்கள் சைவ ஞான அனுபவ நூல்கள் என்ற மட்டிலன்றிச் சைவர்களான நமக்கு வாழ்க்கை நூல்களுமான திருமுறைகளின் சிறப்பை உணர்ந்து அவற்றை நடைமுறை வாழ்வில் அனுசரித்து ஒழுக வேண்டும்.

திருமுறைகள் சைவநெறிக் கருவூலம் என்றும் தமிழ் மொழியின் தேன்பாகு என்றும் பரமசிவன் செவிமடுத்த செந்தமிழ் வேதம் என்றும் நடராசன் தன் கையால் எழுதிய தெய்வ நூலென்றும் திருஆலவாய் சொக்கநாதப் பெருமானின் சிறப்புக்களைக் கூறும் நூலென்றும் அவற்றின் சிறப்பினை பின்வரும் பாடல் தெளிவாக கூறுகிறது.

திருமுறையே சைவ நெறிக் கருவூலம்
தென்தமிழின் தேன்பாகு ஆகும்.
திருமுறையே கயிலையின் கண் சிவபெருமான்
செவி மடுத்த செந்தமிழ் வேதம்
திருமுறையே நடராசன் கரம் வருந்த
எழுதியருள் தெய்வ நூலாம்
திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய்
மலர்ந்தருளும் சிறப்பிற்று ஆமால்.

- தொடரும்

சத்தியத்தை கடைப்பிடித்தால் தாழ்வு வருவதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவத் தமிழ்ச் சான்றோன்
## ஆறுமுக நாவலர்

கவிஞர், சைவசித்தாந்த ரத்தினம்
க. கணேசலிங்கம்

முந்தை யர்வழி வந்த பண்பினை
மூல மெய்ப்பொருள் உண்மையை
சிந்தை தேர்ந்தமெஞ் ஞானி கள்அநு
பூதி மான்கள் நெறிகளை
வந்த அன்னியப் பண்பு மோகத்தில்
வாழ்வில் முற்றும் மறந்தனர்!
அந்த வேளையில் வந்த ஞாயிறே!
அகிலம் போற்றிடும் நாவலா!

உணவி னோடுநல் லுடைபெ ருந்தொழில்
ஊதி யம்எனக் கூறினர்!
கணமும் ஏழ்மையில் கலங்கி நின்றவர்
கடிதி லேதடு மாறினர்!
பணத்தி லேமனச் சாட்சி வீழ்ந்திடப்
பரம தத்தினைப் பற்றினர்!
உணர்வி லாதவர் நிலைமை கண்டுளம்
அழிய நொந்தனை நாவலா!

நேற்று வந்தவர் நீண்ட எம்வர
லாறு கண்டவை மாற்றவோ!
தூற்ற வோஉயர் உண்மை காட்டிடு
தூய எம்மதக் கொள்கையை?
ஆற்றி லேவிழுந் தேகு மோர்துரும்
பாகி எம்மவர் மாள்வதோ?
வேற்று மாந்தரின் சூழ்ச்சி வென்றெமைக்
காத்து நின்றனை நாவலா!

மரபு ணர்த்திடு கல்வி யூட்டினைன்
மறுமலர்ச்சியைக் கூட்டினாய்!
அரவ ணிந்தவன் அருளு ரைத்திடும்
அருமறைகளைக் காட்டினாய்!
வரைவி லக்கணம் இலக்கி யம்தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர நூல்களை ஆக்கினாய்!
உரைகள் செய்தனை உண்மை யோம்பிடு
நெறிகள் கூறினை நாவலா!

பழந்த மிழ்ப்பெரும் ஏடு கள்தமைப்
பலர றிந்திட அச்சிலே
வழங்கி னாய்தமிழ் சைவம் வாழ்ந்திட
வாழ்வை யேபணிக் காக்கினாய்!
விளங்கு நீறணி வேட மும்சிவம்
வளரு சிந்தையும் வீரமும்
உளங்கொள் தொண்டன், யாழ்ப் பாண நல்லூர்
உதித்த ஆறுமுக நாவலா!

சைவமும் தமிழும் அழியாமல் காத்த தவத்திரு ஆறுமுகநாவலரின் நினைவாகத் தரப்படுகிறது.

---

## ஆத்மஜோதி வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ஆத்மஜோதி அன்பர்களே

ஆத்மஜோதி காலாண்டு இதழானது 3000 பிரதிகள்படி ஆண்டுக்கு 12000 மலர்கள் இலவசமாக தபாலிலும், நேரடியாகவும், வியாபார நிலையங்களிலும் ஆலயங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு தங்கள் கரங்களில் தவழுகின்றது.

67 வருடங்களுக்கு மேலாக தடையின்றி வெளிவரும் ஆன்மீக இதழ் கனடாவிலிருந்து தொடர்ந்து வெளிவருவது ஈழமக்களின் ஆன்மீகப் பற்றுக்கு நல்லதொரு சான்று. இப் பெருமை வாய்ந்த 'ஆத்மஜோதி' க்கு தபால் செலவு உட்பட இதர செலவுகளும் உண்டு.

அருட்செல்வம் நிறைந்த 'ஆத்மஜோதி' பொருட் செல்வம் குறைந்த நிலைகண்டு மனம் கலங்குகிறோம்.

ஆன்மீக நூல்கள் வெளிவர உதவி புரிதல் ஞானதானம் ஆகும். ஞானதானத்தின் பிரதி பலனாக பரம்பரை பரம்பரையாக கல்விச் செல்வம் பெறலாம். உடல் உழைப்பால் வரும் பணச் செல்வம் இப் பிறப்பிற்கு பயன் தரும். கல்விச் செல்வம் எப்பிறப்பிற்கும் பயன் தரும். ஞானதானம் பற்றி ஞானிகள் மக்களை ஊக்கப் படுத்துவது இதன் பொருட்டேயாகும்.

ஞானதானம் செய்து தாங்களும் தங்கள் பிள்ளைகளும் பயன்பெற அன்போடு 'ஆத்மஜோதி' வேண்டுகிறது. தங்களது நிதியுதவியை விருப்புடன் வரவேற்கிறோம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ ரமண மகரிஷி - பாகம் 8

சு. சிவதாஸ்
(முன்னாள் ஆசிரியர், யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி)

பகவான் ரமண மகரிசி அண்ணாமலையின் கிழக்குப் பக்க மலைச்சாரலில், ஸ்கந்தாச்சிரமத்தில் தம் அடியாரோடு கூடி வாழ்ந்துவரும் காலத்தில், அவரை வந்து அண்டிய நரசிம்ம சுவாமியின் சரிதத்தை மிகச் சுருக்கமாகச் சென்ற கட்டுரையில் பார்த்தோம். இதே காலப்பகுதியில் பகவானைப் 19வயதில் வந்து சந்தித்து அவரோடு இருந்து வாழ்ந்து 96 வயதில் சமாதியடைந்த மலையாள தேசத்து குஞ்சு சுவாமியின் சரித்திர முக்கியத்துவத்தை இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

குஞ்சுசுவாமி, கேரளாவில் மாணவனாக இருக்கும் காலத்திலேயே குப்பாண்டி சுவாமி என்பவரிடம் 'கைவல்யநவநீதம்' என்ற நூலைக் கற்று வேதாந்த உண்மைகளைக் கற்றுக்கொண்டார். பின்னர் யோக வாசிஷ்டம் என்ற நூலையும் இன்னொரு சுவாமி மூலம் கற்றுக் கொண்டார். இவர் இளமையிலேயே சிவனுடைய அருள் பெற்றவர். இவருடைய பிரார்த்தனைக்கு இறங்கிச் சிவபெருமான் குளம் ஒன்றிலே உள்ள தாமரைப்பூவொன்றில் உருத்திராட்ச மாலையைத் தோற்றுவித்து இவருக்கு அருளினார். கைவல்ய நவநீதம், யோக வாசிஷ்டம் போன்ற வேதாந்த நூல்களைக் கற்றாலும் நேரடியாக ஒரு ஞானகுருவின் நயனதீட்சை கிடைக்க வேண்டுமென விரும்பி, குப்பாண்டி சுவாமியிடம் இது பற்றிப் பேசினார். அப்பேர்ப்பட்ட ஞானி ஒருவர் திருவண்ணா மலையில் வாழ்ந்து வருவதாகவும் தாம் அவரைக் தரிசித்தாகவும் அந்தச் சுவாமியார் இவருக்கு எடுத்துரைத்தார். விலக்கப்பட்ட சாதியொன்றிலே பிறந்து, இளமையிலே சிவபெருமானால், உருத்திராக்க மாலை அருளப்பெற்ற குஞ்சுசுவாமி, பகவான் ரமணரைக் சந்தித்த பொழுது, குஞ்சு சுவாமிக்கு 19 வயதாகும், பகவானுக்கு அப்போது சுமார் 40 வயதிருக்கும்.

தான் கற்றுக்கொண்டதற்கு இணங்கத் தாமாகவே பகவானிடம் பேசக்கூடாது என்றும் பகவான் பேசும் முதல் வார்த்தைகளேயே தமக்கு உபதேசமாக எடுக்க வேண்டும் என்றும் எண்ணியபடி திருவண்ணாமலைக்கு வந்து, மலையேறி ஸ்கந்தாச்சிரமத்துக்கு

---

*சினம் அடங்கினால் சிவம் விளங்கும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தார். அந்த நேரத்தில் பகவான் அமர்ந்திருக்க மூவர் வீழ்ந்து வணங்கிக்கொண்டு இருந்தார்கள். குஞ்சு சுவாமியும் அப்படியே செய்து அமர்ந்து கொண்டார். அந்தநேரத்தில் ஒருபெண் அழுது கொண்டு அங்கே உலாவினார். பகவான் அவளைப் பார்த்து 'நீ ஏன் ஒருமகன் இறந்ததற்கு அழுகின்றாய், இங்கே உனக்கு இன்னொரு மகன் வந்திருக்கிறான்' என்றார். அந்தப் பெண் வேறு யாருமல்ல, பகவானின் தாயாரான அழகம்மையாகும். அண்ணாமலைச்சுவாமி என்ற பகவானின் பக்தர் ஒருவர், அந்த தினத்திலே தான் இறந்துவிட்டார். அவர், அழகம்மாளுக்கு மிகவும் நெருக்கமாக இருந்து, எல்லா உதவிகளையும் செய்து வந்தார். பகவானுடைய பேச்சில் இருந்து குஞ்சு சுவாமியை பகவான் ஏற்றுக் கொண்டார் என்பது புலனாகிற்று. எதுவுமே பகவான், குஞ்சு சுவாமியோடு உரையாடவில்லை, ஆனால் பகவான் ஒரு அடுப்பு மூட்டி கஞ்சியொன்று காய்ச்சினார். தான் வந்த முதல் நாளே தனக்கு மந்திரபானம் காய்ச்சித் தந்து தனக்கு ஞானம் ஊட்டப்போகிறார், தான் எவ்வளவு பாக்கியசாலி என்று எண்ணியபடியே குஞ்சுசுவாமி இருந்தார். கஞ்சி காச்சி முடித்து ஆறவிட்டபின்னர், பகவான் ஒரு கூடையைத் திறந்தார். நான்கு நாய்க்குட்டிகள் கூட்டாகப் படுத்திருந்தவை எழுந்து நாலாபக்கமும் ஓடின பகவான் குஞ்சு சுவாமிக்கு முதல் வார்த்தை சொல்லுகிறார். "இந்த நான்கையும் இழுத்து இறுக்கிப் பிடி". இவர் அப்படியே செய்ய, பகவான் ஒரு தட்டிலே கஞ்சியை வார்த்தார். குட்டிகள் வந்து நக்கிக் குடித்தன. நான்கு வேத்திலும் உள்ள நான்கு மகாவாக்கியங்களையும் நீ இறுக்கிப் பிடி என்பதே தனக்கு பகவான் தந்த முதல் உபதேசம் என்று குஞ்சு சுவாமி எடுத்துக் கொண்டார்.

'தத்துவமசி' (நீயே அதுவாக இருக்கிறாய்), 'பிரக்ஞானம் பிரம்மா' (மெய்ஞானமே இறைவன்) 'அகம் பிரம்மாஸ்மி' (நானே அந்த மெய்பொருள்), 'அயம் ஆத்ம பிரம்மா' (ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்று) என்ற இந்த நான்கும் இந்த மகாவாக்கியங்களாகும். "குட்டிகள் பருகியவுடன் ஒவ்வொன்றாக போகவிடு" என்று பகவான் குஞ்சுசுவாமிக்கு கட்டளையிட்டார். மகாவாக்கியங்களைத் தேர்ந்த பிறகு, ஆத்மா என்ற நினைப்பில் நின்று கொண்டு எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் கைவிட வேண்டும் என்று பகவான் உபதேசம் செய்ததாக இவர் விளங்கிக் கொண்டார். ஒரு நாய்க்குட்டி அதிலே

---

உடைமைகளில் உயர்ந்தது சத்தியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலம் விட, பகவான் சாக்கினால் துப்பரவு செய்தார். அதற்குப் பிறகு இன்னொரு நாய்க்குட்டியும் சலம் விட்டது. தான் அதை துப்பரவு செய்ய குஞ்சு சுவாமி விரும்பினர். பகவான் இவரைப்பார்த்து 'நீ சுத்தம் செய்ய விரும்புகிறாயா, அப்படியாயின் செய்' என்றார். இவர் சாக்கினால், அதைப் துப்பரவு செய்தார். மனத்தை எப்பொழுதும் சுத்தமாக வைத்திரு என்று தமக்கு உரைத்ததாக இவர் எடுத்துக் கொண்டார்.

இவ்வாறு அங்கிருந்து வாழும் நாட்களில் பகவான் குஞ்சு சுவாமியிடம் கேட்டார், 'என்ன சாதனை நீ செய்கிறாய்' அதற்கு 'பஞ்சாட்சர மந்திரமாகிய ஓம் நமசிவாய என்பதை ஜபம் செய்கிறேன்' என்றார். குஞ்சுசுவாமிக்கு அதனைத் தொடர்ந்து செய்யும்படி பகவான் அறிவுறுத்தினார். அங்கே இருந்து வரும் நாட்களில், பகவானுக்கு உதவியாளனாக இருந்து வந்த பெருமாள் சுவாமி தான் யாத்திரை போகப் போவதாகவும், குஞ்சு சுவாமியை தனது வேலையைப் பொறுப்பு எடுக்கும் படியும் கேட்டுக்கொண்டார். பகவானுக்கு நீராட்டுவது, பகவானது பாதங்களை வருடிவிடுவது என்பன உதவியாளனின் கடமையாகும். பகவான் ஒருநாள் குஞ்சு சுவாமியை காவியகண்ட கணபதி முனிவருக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். பகவான் இருக்கும் நிலை 'சகசநிட்டை' என கணபதி முனிவர் குஞ்சு சுவாமிக்கு எடுத்துரைத்தார். சாஸ்திரங்களின் கூற்றுப்படி ஆன்மீக சாதகர்கள் பெரும் ஆற்றல்களின் ஊடாக வளர்பவர்கள். சிலர் சாந்தம், அமைதியூடாக வளர்வர். மீரா, ஆதிசங்கரர் சுவாமி விவேகானந்தர் ஆகியோர், தமது ஆற்றலை கட்டுப்படுத்த முடியாமல் பேச்சுக்களாகவும் பாடல்களாகவும் வெளியிட்டனர். பகவானோ, அமைதியிலே ஆழ்ந்து, திருவண்ணாமலையை விட்டு விலகாமலே, இருந்தார். பகவானுடைய நிலை சகசநிட்டை என்பதைக் கணபதி முனிவர் குஞ்சு சுவாமிக்கு எடுத்துரைத்தார்.

ரமணர் காலத்தில், கேரளாவில் நாராயண குரு என்ற ஞானி வாழ்ந்து வந்தார். அவரும் சகச நிட்டையிலே இருந்து வந்தார். மகாத்மா காந்தி கூட அவருடன் போய் இருக்க விரும்பினார். எல்லா சாதுக்களும் நாராயண குருவைச் சென்று தரிசிப்பார்கள் அந்த நாராயண குருவே ஒருமுறை ரமண பகவானை வந்து சந்தித்தார். நிவிருத்தி பஞ்சகம் என்ற பெயரில் 5 வடமொழிப்பாடல்களை எழுதிப்

*மரணம் வருமுன்னே இறைவனிடம் சரணம் அடை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானைப் போற்றிக் கொண்டு இறங்கிச் சென்றார். நாராயண குரு அப்படி இறங்கும் போது அவருக்கு பேரானந்த சமாதி ஏற்பட்டது. உடனே தனது சீடர்களைப் பார்த்து மகரிசி ஒரு இராஜசர்ப்பம் என்று விளக்கம் கொடுத்தார். கேரளாவை அடைந்து முனிசாரிய பஞ்சகம் என்று இன்னும் 5 வடமொழிப் பாடல்கள் எழுதி அனுப்பி வைத்தார். இவற்றை எல்லாம் நேரே கண்ணுற்றவர் தான் குஞ்சு சுவாமி, நாராயண குரு சமாதி அடைந்த பொழுது, பகவான் குஞ்சு சுவாமியை அனுப்பி, சமாதி சரியான முறையில் அமைக்கப்படுவதை உறுதி செய்யும் படி கேட்டுக் கொண்டார். நாராயண குரு ஒரு பூரண புருசர் என்று பகவான் ரமணர் எடுத்துரைத்தார்.

96 வருடங்கள் வாழ்ந்த காரணத்தினால் குஞ்சு சுவாமியே ரமணருடைய அற்புத வாழ்வை மற்றையோருக்கு எடுத்தியம்பியவர் ஆவார். மலையாளம் மட்டும் தெரிந்த குஞ்சு சுவாமி தமிழைக் கற்று, பகவானுடைய தமிழ் நூல்கள் எல்லாவற்றையும், பகவானிடமிருந்து கற்றுப் பின்னே வந்த சந்ததியினருக்கு பரிமாறினார். தன்னுடைய அனுபவங்களையும் தாம் பிறர் சொல்லிக் கேட்டவைகளையும், பகவான் தமக்கு கூறியவற்றையும் தமிழ் நூலாக்கி, ரமணாச் சிரமத்தின் தூண்டுதலால் வெளியிட்டார். கடைசிக் காலங்களில் படுக்கையிலே கிடந்து தியானித்து, உரையாடிக் கொண்டிருந்த குஞ்சு சுவாமி ஒரு நாள் திடீரென, தமக்கு உதவியாயிருந்த வாலிபர்களுக்கு, தமது படுக்கை மெத்தைகளை விலக்கித் தம்மை வெறும் வாங்கில் விடும்படி வேண்டினார். அதன்படி வெறுமையாக்கப்பட்ட வாங்கிலில் பத்மாசனத்தில் தியானித்துக் கொண்டிருந்தார். உதவிக்கு இருந்தவர்களும் தூங்கிவிட்டார்கள். விடிந்த பொழுது பார்த்தால், சுவாமி சமாதி எய்திவிட்டார் என்பது தெரிந்தது. அப்படியே அவருக்கு சமாதி வைக்கப்பட்டது.

எவரை மறந்தாலும், குஞ்சுசுவாமியை உலகம் மறக்கமுடியாது என்பதை ரமணாச்சிரம வரலாறு சுட்டிக்காட்டுகிறது.

---

*அறத்தைக் காத்தல் அருளாளரின் செயலாகும்.*

*அன்பு என்பது தன்னலமில்லாமையே.*

*ஆதி மனிதன் இறைவனைப் புகழ்ந்து வழிபட்டால் நமக்கு எல்லாம் கிடைக்கும் என்று நினைத்தான்.*

*தலயாத்திரையால் மனம் விரிவடைகிறது*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரோஹரா கோசம்

## பசுந்தீவு கோவிந்தன்

இந்து சமயத்தின் ஒரு பிரிவினரான சைவசமயிகள் மத்தியில் 'அரோஹரா' எனும் இறைநாம கோசம் இறை வழிபாட்டின் போது மிக முக்கிய இடம் பெறுகின்றதை சைவ சமயிகள் எல்லோரும் அறிவோம். எனினும் கனடாவில் இதன் பயன்பாடு குறைந்து செல்வதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இதை, சைவ சமயத்தின் வீழ்ச்சிப் போக்கைக் காட்டும் ஒரு சமிக்கையாகக் கருதலாம். எனவே இந்த விடயத்தில் விழிப்படைவது சைவசமய ஆர்வலர்கள் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் சிவன் ஆவார். மற்றைய தெய்வவடிவங்களுக்கு இருப்பது போன்று சிவனுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்கள் உண்டு. உதாரணமாக வைஸ்ணவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய கிருஷ்ணருக்கு கோவிந்தன், கோபாலன், மாயவன், மதுசூதனன், கண்ணன், நாராயணன் போன்ற பெயர்கள் இருப்பது போன்று சிவனுக்கு அரன், ஹரன், பரன், தற்பரன், பராபரன், சங்கரன், மகாதேவன் போன்ற பெயர்கள் உண்டு. இறைவனுடைய நாமத்தை ஜெபம் பண்ணுவது, உச்சரிப்பது, நாமவளியை (நாம சங்கீர்த்தனம்) ஓதுவது, அரோஹரா, அரகரமகாதேவா என்று கோசமிடுவது ஆகியவை நிச்சயமாக இறை உணர்வை வளர்க்கப் பெரிதும் உதவுகின்றன.

இறைவனைச் சாதாரண மக்களால் அறியமுடியாது. ஜட உலகக் கல்வி அறிவைக் கொண்டும், எவ்வளவுதான் படித்தாலும், இறைவனை அறிய முடியாது. எனவே சாதாரண மக்கள் தாம் இறைவழிபாட்டில் கொண்டிருக்கும் அனுபவத்திற்கேற்ப இறைவனை உணரத்தான் முடியும். வேறு வார்த்தையிற் சொன்னால், சாதாரண மக்களைப் பொறுத்தவரையில் இறைவன் உணர்வு பூர்வமானவனே. எனவே சாதாரண மக்களாகிய நாம் இறை உணர்வை இயன்ற அளவிற்கு வளர்த்துக் கொள்ள வேண்டும். இறை உணர்வுடன் சேராத எந்த வழிபாடும் எமக்குப் பிரயோசனம் அளிக்காது என்பதை ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

---

*பிறறிடம் கருணை காட்டுபவனிடம்*
*கருணை மேலும் வளர்கிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறை உணர்வைச் சாதாரண மக்கள் வளர்த்துக் கொள்ளுவதற்காக மகான்களால் உருவாக்கப்பட்டவற்றுள் ஒன்று தான் 'அரோஹரா' எனும் இறைநாம கோசமாகும். இது மிகப் பிரயோசனமானதும் சக்தி வாய்ந்ததும் ஆகும். எப்படி? என்று பார்த்தால் 'அரன்' என்றால் வினைகளை அறுப்பவன் என்பதும், 'ஹரன்' என்றால் மாயாகாரியத்தை ஒடுக்குபவன் என்பதும் பொருளாகும். அரன் + ஹரன் என்பதன் விகாரமே 'அரஹர' என்பதாகும். 'அரஹர' என்பதன் விகாரமே 'அரோஹரா' ஆகும். 'அரோஹரா' எனும் நாமத்தைக் கோசமிடுவதனால், எம்முள் இறை உணர்வு வளர்ந்து, அதன் பெறுபேறாக எல்லாத் தீயவினைகளினதும் விளைவுகள் அறுக்கப்படும்.

'அரன்' என்றால் வினைகளை அறுப்பவன் என்று பார்க்கும் பொழுது, நாம் ஏற்கனவே செய்த தீயவினைகளுக்குரிய விளைவுகளை அறுப்பவன் என்று அறியமுடிகின்றது. 'ஹரன்' என்றால் மாயாகாரியத்தை ஒடுக்குபவன் என்று பார்க்கும் பொழுது பூவுலக மாயையில் அகப்பட்டு எதிர்காலத்தில் நாம் செய்யப்போகும் தீயவினைகளைச் செய்யவிடாது தடுப்பவன் என்று அறிய முடிகின்றது. இதை இரத்தினச் சுருக்கமாய்ப் பார்த்தால், ஏற்கனவே உள்ள பாவ கன்மத்தை அழிக்கிறான். அத்தோடு வரப்போகும் பாவ கன்மத்திலிருந்து காப்பாற்றுகிறான் என்பது தெளிவாகின்றது. அதன் பெறுபேறு பூவுலக வாழ்வை இன்பத்துடன் அனுபவிக்கவும், அதைத் தொடர்ந்து பரலோக வாழ்விற்கு எம்மை இட்டுச்செல்லவும் இது உதவும் என்பது பட்டவர்த்தனமாகும். இவ்வாறான பெறுபேற்றைத் தரும் வல்லமை கொண்ட 'அரோஹரா' எனும் இறைநாமத்தைக் கோசமிடாமல் இருப்பது எவ்வளவு அறிவீனம் என்பதை நாம் உணர வேண்டும். இந்த உண்மையை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைநாமத்தை ஜெபிப்பது, உச்சரிப்பது, ஓதுவது என்பனவற்றிற்கு மேலாக இறைநாமத்தைக் கோசமிடுவது என்பது இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. 'அரோஹரா' எனும் இறைநாமத்தைக் கோசமிட வேண்டும், அதாவது முடிந்த அளவிற்குச் சத்தமிட்டுச் சொல்ல வேண்டும். மற்றைய அடியவர்களுடன் சேர்ந்து கோசமிடுவது அதிசிறப்பு. அவ்வாறு கோசமிடுவது மிகப்பெரிய பலனை அளிக்கும். அரோகரா கோசம் அவ்வளவு சக்தி கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியவர்கள் எல்லோரும் சேர்ந்து அரோஹரா எனும் இறைநாமத்தைக் கோசமிடும் பொழுது சிவபெருமான் நிஸ்டையில் இருந்தாலுங்கூட அடியவர்களின் கோசத்தைக் கேட்கத் தவறமாட்டார் என்பது இதன் அர்த்தமாகும்.

ஆலயங்களில் சந்நிதானத்தின் திரை நீக்கப்பட்டுத் தீபம் காட்டும் வேளையிலும், பஞ்சாராத்தி காட்டும் வேளையிலும், பால் அபிஷேகம் செய்யும் வேளையிலும், கற்பூராஞ்சலி சமர்ப்பணமாகும் வேளையிலும், புஸ்பாஞ்சலி சமர்ப்பணமாகும் வேளையிலும், இறைவன் வசந்த மண்டபத்திலிருந்து எழுந்தருளும் வேளையிலும், வசந்தமண்டபத்தைச் சென்றடையும் வேளையிலும் அரோஹரா கோசமிட்டு இறைவனை வழிபடுவது சைவசமயிகள் மரபு. இவ்வேளைகளில் சிவாச்சாரியார்களே 'அரோஹரா' கோசத்தை ஆரம்பித்து வைப்பார்கள். அதைத் தொடர்ந்து அடியார்கள் எல்லோரும் கோசமிட வேண்டும். அந்த வேளையில் சிவாச்சாரியார்கள் கோசமிடத் தவறினும் அடியவர்கள் தவறாது கோசமிட்டு இறை உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும். காரணம் சிவாச்சாரியர் அடியார்களுக்கு வழிகாட்டுபவர்களே தவிர, அடியவர்களுக்காக வழிபாடு செய்பவர்களல்லர். இவ்வேளையில் சிரசிற்குமேல் கைகுவித்து அரோஹரா கோசம் இட முடியாதவர்கள் ஆணவ மலத்தால் இறுக்கமாகக் கட்டுண்டு இருக்கின்றனர் என்று அறியப்படுகின்றனர். இது ஞானிகளின் கருத்தாகும்.

எமது ஆலயங்களில் திரை நீக்கப்பட்டுத் தீபம் காட்டப்படுகின்ற வேளையில் மணி ஓசை பலமாக ஒலிக்கப்படுகின்றது. அதே வேளையில் அடியவர்கள் எல்லோரும் 'அரோஹரா' கோசமிட்டு சிரசிற்குமேல் கை குவித்து இறைவனை வணங்கவேண்டும். காரணம் இறைவன்ன நேரடியாகப் பார்க்க வலிமை அற்ற சாதாரண அடியவர்களாகிய நாம் ஒளி வடிவிலும் ஒலி வடிவிலும் இறைவனைப் பார்த்தும் கேட்டும் வழிபடும் வேளை இதுவாகும். இந்த அருமையான, அற்புதமான வேளையை நாம் தவறவிடாது சிரசின் மேல் இரு கரம் கூப்பி 'அரோஹரா' கோசமிட்டு இறை உணர்வோடு (உள்ளன்போடு) வணங்க வேண்டும். ஆணவ மலத்தின் பிடியில் (அறியாமையின் பிடியில்) இருப்பவர்களுக்கு அவ்வாறு வழிபடுவது கஸ்டமாயிருப்பினும், தமது அறியாமையை உணர்ந்து கைகூப்பி 'அரோஹரா' கோசமிட்டு

*எல்லா உயிர்களிடத்தும் நீ வணங்கும் கடவுளைப்பார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன்போடு வணங்க முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் ஆணவமலம் (அறியாமை) படிப்படியாய் பலவீனமடைந்து வீழ்ச்சியடையும். அதன் மூலந்தான் அடியவர்க்கு விடுதலை கிட்டும். இது படிமுறை வளர்ச்சியாய்த் தான் நிகழவேண்டும். திடீரென்று செய்ய முடியாது. மனவைராக்கியத்தோடு முயற்சித்தால் நிச்சயம் வெற்றி கிட்டும் 'நமப்பார் பதீ பதயே!' எனும்போது அரஹர 'மகாதேவா' எனும் கோசமும் மேற்கூறப்பட்டதை ஒத்ததே.

அரோஹரா, அரஹர மகாதேவா எனும் சிவநாம கோசங்கள் அடியார்களுக்கு இறை உணர்வை ஊட்டவும் இறை அருளை அளிக்கவும் உதவுவது மட்டுமல்லாது, ஆலயங்களின் அருட்சக்தியையும் வளரச் செய்கின்றன. இறையருளால் நிரப்பப்படாத கோயில் வெறும் கட்டிடமே ஆகும். அவை இறையருளால் நிரப்பப்படும் போது தான் ஆலயமாக மிளிருகின்றன. எந்தவொரு ஆலயத்தில் அரோஹரா, அரஹர மகாதேவா கோசங்கள் அடியார்களால் பக்தியோடு பலமாக எழுப்பப்படுகின்றதோ, அந்த ஆலயத்தில் நிச்சயம் இறையருள் நிறைந்திருக்கும். அங்கு இறை அற்புதங்கள், அதிசயங்கள் நிகழும், இது நாம் அனுபவத்தில் கண்ட பேருண்மை ஆகும். எனவே அடியார்கள் தங்களின் நன்மைக்காகவும் ஆலயத்தின் திருவருள் சக்திக்காகவும்) இயன்ற பலத்துடன் அரோஹரா, அரஹர மகாதேவா எனும் கோசங்களை எழுப்பி இறைவனை வணங்க வேண்டும்.

எமது இளஞ்சந்ததியினர் இப்பெரும் சிவநாமங்களைக் கோசமிடுவதில் மிகவும் பின் தங்கியிருப்பதைக் காணமுடிகின்றது. இதற்குச் சூழல் ஆதிக்கமும் ஒரு காரணம். எது எப்படியிருப்பினும் இறைநாம கோசங்களின் பயனையும் அதன் முக்கியத்துவத்தையும் இளைஞர்களுக்கு எடுத்துரைத்து, இதைப் பின்பற்ற வைப்பது பெற்றோரதும் முதியோரதும் கடமை ஆகும். மௌனமாயிருந்து இறைவனை வணங்கி இறையருளைப் பெறக்கூடிய வல்லமை சாதாரண மக்களாகிய எமக்கு இல்லை என்ற உண்மையை உணர்ந்து, எல்லோரும் இறைநாமத்தைக் கோசமிட்டு இறையருளைப் பெற வேண்டியது கலியுகத்தில் கட்டாயமாகும். இது போன்ற இறை நாமங்கள் சாதாரண மக்களுக்குரிய மந்திரங்களாகும்.

---

நாம் படும் துன்பம் யாவும்
நம்மை ஞான நிலைக்குக் கொண்டு வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகத்தில் இறை அருளைப் பெற்று இன்புற்று வாழ்வதற்குப் பக்தியோகமே சிறந்தது என்று முனிவர்களும், யோகிகளும் சித்தர்களும் கூறி வைத்துள்ளார்கள். இறைநாமகோசம், இறைநாம சங்கீர்த்தனம், இறைநாம ஜெபம், திருமுறை ஓதல், மற்றும் பாராயணங்கள் என்பன பக்தியோகத்தில் முக்கிய இடம்பெறுகின்றன. இதுவே பகவத் கீதையிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இறைவனின் நாமத்தைக் கோசமிட்டு, வணங்கி அவன் அருள்பெற்று இன்புற்று வாழ்வீர்களாக!

'அரோஹரா!'

'அரஹர மகாதேவா!'

தென்னாடுடைய சிவனே போற்றி

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

---

## 2012 தை மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்

| | |
|---|---|
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| செல்வன். மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| செல்வன் மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| திரு. விநாயகர் கந்தவனம் | $ 200.00 |
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திருமதி. கோகிலாம்பாள் கனகசபாபதி | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திரு. சு. சிவபரமானந்தம் | $ 200.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | $200.00 |
| அமரர் சரவணமுத்து ஞானசம்பந்தர் நினைவாக | $200.00 |
| அமரர் கந்தையா செல்லப்பா நினைவாக | $ 200.00 |
| திரு. இ. முருகேசு | $ 200.00 |
| திரு V. N.. சோமசுந்தரம் | $ 400.00 |
| அமரர் சின்னத்தம்பி செந்திவடிவேல் நினைவாக | $ 200.00 |
| செல்வி கமலா சிங்கநாயகம் | $ 200.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துசமயப் பேரவைச் செய்திகள்

**தை புத்தாண்டு வருடப் பிரார்த்தனை**



1-1-2016வெள்ளிக்கிழமை மாலை 3மணியளவில் ஆத்மஜோதி இல்லத்தில் தை புத்தாண்டு வருட பிரார்த்தணை வெகு சிறப்பாக பேரவையின் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பெற்றது.

**தாயுமானவர் சுவாமிகள் குருபூசை, அபிராமிப்பட்டர் குருபூசை**



7-2-2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில்
ஆத்மஜோதி இல்லத்தில் பேரவையினரால் சிறப்பாக மேற் குறிப்பிட்ட குருபூசைகள் நடத்தப்பெற்றது. திருக்கூட்டத்தினர் பக்தி சிரத்தையுடன் பங்குபற்றினர் தாயுமானவர் பாடல்கள் அபிராமிஅந்தாதி ஆகியன ஓதப்பெற்றன.

**குடைச்சுவாமிகளின் குருபூசை**

15-2-2016திங்கட்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் மாலை4.30 மணிவரை குடைச்சுவாமிகளின் குருபூசையை



முன்னிட்டு திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. நண்பகல் சிவபூசையும் சுவாமிகளின் திருவுருவப்படத்திற்கு திருவடி வணக்கமும் செலுத்தப்பெற்றது. திருக்கூட்ட உறுப்பினர்கழுடன் சுவாமிகளின் பக்தர்களும் பங்குபற்றிச் சிறப்பித்தனர்.

**சிவயோகசுவாமிகளின் வருடாந்தக் குருபூசை**



19-3-2016 சனிக்கிழமை காலை 7 மணிதொடக்கம் இரவு10 மணிவரை சிவயோகசுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு அவர் பாடிய நற்சிந்தனை முற்றோதல் நடத்தப்பெற்றது திருக்கூட்டத்தினரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகர் சுவாமிகளின் பக்தர்களும் பங்கு பற்றிச் சிறபபித்தனர். நண்பகல் சிவபூசையும் சுவாமிகளின் திருஉருவப்படத்திறகு திருவடிவணக்கமும் செலுத்தப்பெற்றது.


**கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்**

**ஆதீன விலாசம்:**



கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!


## 2014 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

| | |
|---|---|
| அமரர் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, உடுப்பிட்டி நினைவாக (2015) | $100.00 |
| வே. சிவபாலன் நினைவாக (2015) | $100.00 |
| க. சண்முகம் இளைப்பாறிய அதிபர் நினைவாக | $200.00 |
| பொ. தங்கராஜா (2014) | $100.00 |
| திருமதி. கௌரி தர்மபாலா (2014) | $200.00 |
| (சிவமயச்செல்வி பரமேஸ்வரி சரவணமுத்து நினைவாக) | |
| கந்தையா விஜயரட்ணம் நினைவாக(2015) | $150.00 |
| பரமேஸ்வரி சிவராமலிங்கம் (2015) | $100.00 |
| இராஜநாதன் கணேஸ் நினைவாக (2016) | $310.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குப்பிழான் கிராமத்தின் ஞானப்புதல்வி அமரத்துவமானார்

### சிவ. முத்துலிங்கம்



தன் வாழ்நாள் முழுவதும் தவ வாழ்வு வாழ்ந்து சைவ சமயத்திற்கு அரும்பணியாற்றிய அன்னை மாதாஜி அவர்கள் மார்ச் மாதம் 5ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். சைவ சமயத்தின் மீது உள்ள தீராத அன்பினால் உலகியல் வாழ்வைத் துறந்து தன் இளம் வயது தொடக்கம் பூரண துறவியாக தன் வாழ்க்கையை மேற்கொண்டார். 25க்கு மேற்பட்ட சமய ஆன்மீக நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அவர் எழுதிய நூல்கள்யாவும் ஆன்மீக புத்துணர்ச்சி யையும் சைவ சமய எழுச்சியையும் ஊட்டுபவை. தன் சமயச் சொற்பொழிவுகளாலும் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் ஆன்மீக சமயக் கட்டுரைகளை எழுதியதாலும் சைவத் தமிழ் மக்களுகககு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

ஆசிரியையாக பணியாற்றிய அன்னை அவர்கள் கூடிய காலம் வன்னிப்பிரதேசமான கிளிநொச்சியில கடமை புரிந்தார். சைவப் பெரியார் கதிரவேலு அவரகளினால் ஆரம்பிக்கப் பெற்ற குருகுலத்தில் இணைந்து அங்கே தங்கியிருந்து குருகுல வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினார். ஏழைகள் அநாதைகளின் கூடாரமாக இருந்த குருகுலத்தில் ஏழைப்பிள்ளைகளின் வாழ்வில் ஒளியேற்றினார் அன்னை மாதாஜி அவர்கள். சிவயோக சுவாமிகளின் சிஷ்யையான மாதாஜி அவர்கள் யோகர் சுவாமிகள் தனக்கு குருவாகக் கிடைத்தது தன் ஆன்மீக வாழ்வில் பெரிய பேறும் வரப்பிரசாதமும் எனக்கூறுபவர். ஆறுமுகநாவலரை தன் மானசீகக் குருவாகக் கொண்ட அன்னை அவர்கள் நாவலர் வழியில் சைவசமயம் பேணி பாதுகாக்கப்பட வேண்டுமென்ற கொள்கை உடையவர். நாவலரின நூல்களை தன் முக்கிய பாராயன நூல்களாகக் கொள்பவர் நாவலரின் சைவவினாவிடையும் பாலபாடமும் மாணவர் களின் கைநூலாகத்திகழ வேண்டுமென்பதில் விருப்பமுள்ளவர். அவ்விரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களும மாணவர்களை சைவசமயிகளாகவும் ஒழுக்க முள்ளவர்களாகவும் வாழவழிவகுக்கும் எனக் கூறுபவர். தன் இளமைக்காலத்தில் வெள்ளைச்சேலை உடுத்து துறவியாக வாழ்ந்தவர் மூன்றாவது தீட்சை பெற்ற பின்பு சன்னியாசினியாக வாழ்ந்தார். தன் உழைப்பின் பெரும்பகுதியை ஏழைகளின் நல் வாழ்விற்காக செலவழித்தார்.

தென் இந்தியாவில் அண்ணாமலை வளாகத்தில் படித்துப் புலவர் பட்டம் பெற்றவர் வளாகத்தில்படிக்கும் காலத்தில் பல சாதனைகளை புரிந்தவர். பேராசிரியர்களின் பாராட்டுக்களை பெற்றவர். படித்து பட்டம் பெற்ற பின்பு தாயகத்திற்கு வந்து மலைநாடு கிளிநொச்சி கொழும்பு ஆகிய இடங்களில் கற்பித்து இளைப்பாறியபின் கொழும்பில் சிலகாலம் வாழ்ந்து சில நூல்களை எழுதி வெளியிட்டார். பின்பு துர்க்காதுரந்தரியின் அனுசரணையுடன் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மகளீர் இல்லத்தில் சில வருடங்கள்வாழ்ந்தார். பிற்காலத்தில் தன் பிறந்த கிராமமான குப்பிழானில் தன் குலதெய்வமான சொக்க்ர் வளவு சோதிவினாயகர் ஆலயமடத்தில் வாழ்ந்து வந்தார்.ஆலயத்தில் அறநெறிப் பாடசாலைகளை அமைத்தும் பிரார்த்தனைகளை நடத்தியும் அருளுரை வழங்கியும் ஆலயத்திற்கு செல்லும் கிராம மக்களையும் சிறார்களையும் நல்வழிப்படுத்தினார். அவ் ஆலயவளாகத்தில் மகான் சைவசித்தாந்தசிகாமணி செந்திநாதஐயரின் திருஉருவச்சிலை உள்ளது. மாதாஜி அம்மையார் அவர்களும் ஆலய வளாகமடத்தில் வாழ்ந்து இறைவனின் சிவ ஒளியில் இரண்டறக் கலந்தார்.

தினமும் சிவபூசையும் தியானமும் நாமஜெபமும் அம்மையார்அவர்களின் வழிபாட்டு நெறிகளாகும். ஞானிகள், மகான்கள், சித்தர்கள் தான் எமது சமயத்தை தாங்கி நிற்கும் தூண்களாவர். அவர்களுடைய பூதஉடல் மறைந்தாலும் சூக்கும உடலில் உலாவி மக்களுக்கு நன்மை செய்து கொண்டே இருப்பார்கள் மாதாஜி அம்மையார் அவர்களின் ஆத்மாவும் சைவத்தமிழ் உலகெங்கும் ஒளிபரப்பி காக்கவேண்டுமென பிரார்திப்போமாக.

மகான் காசி வாசி செந்திநாதையர், ஆனந்த சடாட்சரகுரு, சரவணை முத்துச் சுவாமிகள், அன்னை மாதாஜி, விசாலாட்சி அம்மையார் ஆகியோரை குப்பிழான் கிராமம் பெற்றெடுத்ததால் கிராமமும் மக்களும் புனிதம் அடைந்தனர்.

---

*ஒன்றையே நினை உறுதியாக நினை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ. முத்துலிங்கம்

* நடை உடை பாவனை நல்லாக இருந்தால் தானே நாலுபேர் மதிப்பார்கள் என்றுசாதாரணமாக சொல்லுவதுண்டு.

* நடை என்ற சொல்லுக்கு நடத்தல் என்ற கருத்தும் உண்டு. ஒழுக்கம் என்ற கருத்தும் உண்டு.

* ஒவ்வொரு நாளும் நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் நல்ல நடத்தைக்கு ஒத்த செயல்களா என்று சீர் தூக்கி பார்த்துச் செய்ய வேண்டும்.

* நல்ல நடத்தை மேன்மையை உண்டாக்குவதனால் நல்ல நடத்தையை உயிரைக்காட்டிலும் உயர்ந்ததாக மதித்து மிகவும் கருத்தோடு காக்க வேண்டும்.

* உயிர் எல்லோருக்கும் இருக்கிறது. உயர்வு எல்லோருக்கும் இல்லை.

* ஒழுக்கத்தினால் தான் உயர்வு கிடைக்கிறது. அதனால் உயிரைக்காட்டிலும சிறந்தது ஒழுக்கம் ஆகும்.

* ஒரு சிறுகுறை எல்லாப்புகழையும் கெடுக்கிறது. குறை ஏதும் இல்லாத ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

* பரி பூரணமான அன்பு இருக்குமானால் ஒன்றும் இல்லாத இடத்திலும் நம்முடைய அன்புக்குப் பாத்திரமானவருடைய உருவம் தோன்றும்

* தீய ஒலிஅலைகள் எந்த நேரமும் எங்கும் சூழ்ந்திருக்கும் உலகத்திலும் உள்ளத்திலும் இறைவனின் நாம ஒலிஅலைகளை நிறையச் செய்ய வேண்டும்.

* நல்ல நினைவினால் நல்ல பேச்சும் நல்ல செயலும் உண்டாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* உயிருக்கு இயல்பான பண்பு அன்பு. அதை நாம் குழந்தைகளிடம் காணலாம்

* இந்தக் கலியுகத்தில் நாம ஜெபப் பயிற்சி ஒன்றே நித்திய சாந்தியை அளிக்க வல்லது.

* அழியா பேரானந்தத்தை பெறஎல்லோருக்கும் விருப்பம் உண்டு அதனைப் பெற வேண்டுமென்றால் இன்றே ஜெபத்தை ஆரம்பிக்க வேண்டும். ஜெபம்செய்வதற்கு எவ்வித கட்டுப்பாடும் கிடையாது

* நாம ஜெபத்தை போக்கிலும் வரத்திலும் இருந்து கொண்டும் நின்று கொண்டும் படுத்துக்கொண்டும் நித்திரையிலும் ஜெபம் செய்யலாம்.

* குரங்குபோல அலைந்து திரியும் மனத்தை இறைவனது நாமமாகிய சங்கிலியால் இறைவன் திருப்பாதத்தில் கட்டி விடவேண்டும் இதுவே ஜெபயோகத்தின் பயனாகும்.

* இறைவனின் கருணை எல்லோர்க்கும் எக்காலத்திலும் ஒரே மாதிரியாகக் கிடைத்துக் கொண்டே இருக்கிறது. அதனைப் பயன்படுத்துவோர் மகான்கள் ஆகின்றனர். அருள் பெற்றவர்கள் திருவருட் செல்வர் ஆகின்றனர். பயன் படுத்தாதோர் பாவிகள் ஆகின்றனர்.

* உலகிலுள்ள மனிதர்கள் யாவரும் இன்பத்தை அடையவே விரும்புகின்றார்கள். இன்பம் உள்ளத்திலே உள்ளது. உள்ளம் சாந்தி அடையும் பொழுது அதுவே பேரின்பம் ஆகின்றது.


* ஆத்மீகசாதனை பலபலவாக விரிந்து கிடக்கின்றன. அவை எல்லாவற்றுள்ளும் மிகச் சுலபமான சாதனை சற்சங்கமாகும்.

* மனிதனுடைய தேவை அவனுடைய மனத்தை பொறுத்தே அமைகிறது.

* உலகத்தேவைகளை அனுபவித்து மனம் சஞ்சலம் உறும் பொழுது அதற் கெதிரான சாந்தியை அடைய மனம் அவாவுறுகிறது. கடவுளின் நாட்டமும் பக்தியும் அதிகரிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Trillium Mortgage

# Mortgage தேவைகளுக்கு அழையுங்கள்

## Thulasitharan Muthu
(Thulasi)
Mortgage Agent

**Direct: 647-983-9505**

E-MAIL: thulasi17@hotmail.com

200 Consumers Road, Suite 301
Toronto, ON. M2J 4R4
Broker Licence # 11396

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**TEL: 416-269-1994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org